விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 09 வெள்ளிக்கிழமை (24.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005




## ஒருவேளை உணவை பெறமுடியாத அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார பாதிப்பை எதிர் கொண்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் உரிய திட்டங்களை முன்னெடுக்காமலிருப்பது கவலைக்குரியது.

ஒருவேளை உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். குளிர் அறையில் இருந்துகொண்டு எடுக்கும் தீர்மானங்கள் 15

## கொரோனா 21 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 21 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## 'உண்மையைக் கூறினால் தலைதுண்டிப்பு'

# அச்ச நிலையில் அரச ஊழியர்கள்

### ஜனாதிபதியின் நடவடிக்கை தொடர்பில் ஐ.தே.க பிரதித் தலைவர் ருவான்



*(கொழும்பு)*

*நாட்டின் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தும் அரச ஊழியர்களின் தலையைத் துண்டிக்கும் வகையிலேயே அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் நடவடிக்கை அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன விமர்சித்துள்ளார்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்ப்பாணத்தில் மற்றொரு நபருக்கு மலேரியா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மலேரியாத் தொற்றுக்குள்ளான மற்றொரு 15

## மின்சார கட்டணமும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

மின்சார, நீர் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 15

## கிளிநொச்சியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் பகுதியில் எரிவாயு (காஸ்) அடுப்பு வெடிப் 15

## ஏழுமலையானை தரிசிக்க திருப்பதி சென்றார் மகிந்த



(திருப்பதி)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இரண்டு நாட்கள் பயணமாக இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

நேற்றுக் காலை தனிப் 15

## இலங்கையின் உள்விவகாரங்களில் ஐ.நாவின் தலையீட்டை எதிர்க்கின்றோம்

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை சுமுகமாக பயணிக்கும். எனினும் நாட்டின் உள்ளக விவகாரங்களிலான அதன் அதிகமான தலையீடுகளை தாம் எதிர்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

17 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர்களை சந்தித்த போதே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரி 15

## நாட்டில் விலையேற்றத்தைக் கண்டித்து 20 பிரதான நகரங்களில் போராட்டம்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும், மக்களுக்கு நிவாரணம்வழங்குமாறு வலியுறுத்தியும் நாட்டின் 20 பிரதான நகரங்களில் போராட்டங்களை ஜே.வி.பி நடத்துகின்றது.

அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மஹரகம, கம்பஹா, கிரிபத்கொட, இரத்தின புரி, கேகாலை, மொன ராகலை, தம்புள்ள, 15

## பாண் ஒன்றின் விலை 100/= வரை உயரும்

### எதிரணி எதிர்வுகூறல்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டு ஜனவரியாகும்போது நாட்டில் ஒரு இறாத்தல் பாணின் விலை 100 ரூபாய் வரை அதிகரிக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர்அசோக அபேசிங்க எம்.பி. 15

## தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்க தயாராக இருக்கின்றேன்

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்



(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், தமிழ்பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்தில் அது நிச்சயம் பங்கேற்கும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாள 15

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்.மாவட்ட செயலகம் முன் இன்று முற்றுகைப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினால் இன்று யாழ். மாவட்ட செயலகத்தை முற்றுகையிடும் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஆசிரியர்கள் தேவை

எமது கல்வி நிறுவனத்திற்கு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை. கற்பித்தல் அனுபவமும் பாடசாலை ஆசிரியர்களும் விரும்பத்தக்கது.

புதிய நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 459 8440
(9203)


# பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து கட்டணங்கள் 25 வீதமாக அதிகரிக்கப்படும் எனவும் அந்த சங்கம் கூறியுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சலுகை துரிதமாக வழங்கப்பட்டால், கட்டண அதிகரிப்பு வீதத்தில் மாற்றத்தை செய்ய முடியும் என சங்கத்தின் தலைவர் ருவான் பிரசாத் குறிப்பிட்டுள்ளார்.

இல்லை என்றால், தமது கட்டண அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நடைமுறைக்கு வரும்எனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


## 36 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
12 . 04 . 1942



இறப்பு
17 . 11 . 2021

கடந்த 17.11.2021 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### திருமதி அன்னப்பிள்ளை பரமேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (24.12.2021) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
(C-3342)
குடும்பத்தினர்



## 34 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்



முன்னாள் தமிழக முதல்வர்

M.G. இராமச்சந்திரன்

ப. விஜயகுமார்
இல. 27/1, பொன்னப்பா லேன்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(9211)



## 2 ஆம் மொழிச் சிங்கள ஆசிரிய பயிற்சியும் வேலை வாய்ப்பும்

இந்து பௌத்த கலாசார பேரவையானது கல்வி அமைச்சின் ஆலோசனைக்கிணங்க யாழ். மாவட்டத்தில் மேலும் 50 தமிழ்மொழி மூலம் சிங்கள ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதால் ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிகள் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் ஆர்வமும் தேர்ச்சியும் உள்ள மாணவர்கள் தை மாதம் (15.01.2022) 15ஆம் திகதிக்கு முன்னர் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு துரிதமாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ஆரம்ப சிங்கள அறிவு இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- க.பொ.த (உ/த) ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- வயதெல்லை 20 - 35
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(9205)

தொடர்புகளுக்கு
செயலாளர்
இந்து பௌத்த கலாசார பேரவை,
யாழ்ப்பாணம்.
076 028 2693




## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

நன்றி மறவோம் என்றென்றும்

அமரர்

### தவேந்திரன் தனிஸ்ரன் [தனுஸ்]



2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத்துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகைதந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாதைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்வு
2000.10.13

உதிர்வு
2017.12.24

6ஆம் வட்டாரம், சிவநகர்,
புதுக்குடியிருப்பு.

077 276 8570
076 971 1453

தனிஸ்ரன் பல்பொருள் வாணிபம்,
முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.
(C-3341)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக் கொத்தாய் தமிழினம் செத்து மடிந்தபோது வராத சீனா இப்போது ஏன் இங்கு வருகிறது?

## இந்தியாவை சீண்டுவதற்கே என்கிறார் சுரேஷ்



(கொழும்பு)

**"தமிழ் மக்கள் அல்லலுறும்போதும் நியாயத்திற்காகப் போராடிய போதும் உதவ முன்வராத சீனா இப்பொழுது கரிசனை காட்டுவதுபோல் நடிப்பது பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது" என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

உலகத்தின் பொலிஸ்காரனாக தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் சீனா முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் நாங்கள் சீனாவுடன் பேசியபொழுது, "நாங்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகளை வைத்துக்கொள்வோமே தவிர, உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம்" என்று கூறினார்கள். அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்கள் யுத்த குற்றங்களுக்கும் இனப்படுகொலைக்கும் எதிராக உலக நாடுகளிடம் நீதி கேட்டு சர்வதேச மன்றங்களை அணுகிய போது, அங்கும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் அவர்களது கோரிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டு இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றி வந்தார்கள். இப்பொழுது, தமிழ் மக்கள்மேல் பரிவுகொண்டவர்கள் போல் நடித்து, மீனவர்களுக்கு உதவி செய்கின்ற போர்வையில், ஒரு தொகுதி வலைகளையும் உலர் உணவுகளையும் கொடுத்த நாடகத்தை நாங்கள் அண்மையில் பார்த்தோம்.

வடக்கு மாகாணத்தில் அவர்களது பிரசன்னம் என்பது இந்தியாவைச் சீண்டுவதைத் தவிர வேறெதுவும் இல்லை. யுத்த காலத்தில் மிக அதிகளவிலான இராணுவ தளபாடங்களையும் விமானங்களையும் கொடுத்து இலங்கையை தனது பெருங்கடன்கார நாடாக்கிய பெருமை சீனாவையே சாரும். வடக்கு-கிழக்கு மாகாணம் என்பது இந்தியாவிற்கு கூப்பிடுதொலைவிலுள்ள ஒரு பிரதேசம்.

இங்கு சீனர்களின் பிரசன்னம் என்பதோ, முதலீடுகள் என்பதோ இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகங்களை ஏற்படுத்தும் என்பது சாதாரண ஒரு அரசியல் மாணவனும் புரிந்துகொள்ளக்கூடிய விடயம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், வடமாகாணத்தில் ஏற்படுத்தப்படும் முதலீடுகளுக்கு இலங்கை சீனாவிற்கு இடமளிப்பதென்பது அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

எமக்கு மிகவும் அண்மித்த பிரதேசமான தமிழகத்தில் எட்டு கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆகவே இந்தியாவிற்கு எதிராக வடக்கு மாகாண மண்ணை சீனா போன்ற நாடுகள் பாவிப்பதற்கு எந்தவிதத்திலும் அனுமதி அளிக்க முடியாது.

சீனாவின் இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால், வடக்கு-கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையிலும், வடக்கு- கிழக்கு மாகாண இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் வகையிலும் உற்பத்திசார் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு இந்தியா முதலீடுகளையும் வழிகாட்டுதல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தேவையான மின்சாரம், குடிநீர், வடிகால் அமைப்பு போன்ற விடயங்களில் தன்னிறைவடைவதற்கும் இந்தியா உதவ முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# மூன்று வாரங்களில் ஒமிக்ரோன் வேகமாகப் பரவும் அபாயம்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று வாரங்களில், இலங்கையில் வேகமாக பரவும் கொரோனா திரிபாக ஒமிக்ரோன் காணப்படும் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன் தலைவர் உபுல் ரோஹண நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் புதிதாக இனங்காணப்பட்ட 3 தொற்றாளர்கள் உட்பட இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள 7 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் தொடர்பான ஆய்வின் மூலம் இது தெளிவாகிறது என சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் நாடு மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு உள்ளாவதை தடுப்பதற்கு பண்டிகைக் காலங்களில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு இல[illegible] விருந்தினர் கதிரைகள், 30 கதிரைகள் என்பன [illegible] வாலிபர் சங்கத்திற்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- ரவிசாந்)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-19 முஸ்லிம் கல்லூரி வீதி ஆதன இல.42 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் உசன் தம்பி பெண் M.கனீபா என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு மொகமட் சுல்தான் பலீல் முகதாவில் 102ம் இலக்க 28.03.2011 ஆம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் இல.28 ஆசாத் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மீரான் மொகிதீன் கலீல் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த மீரான் மொகிதீன் கலீல் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 200ம் இலக்க 30.04.2012 ஆம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை தியாகராசா விக்கினேஸ்வரனுக்கு அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறையில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட 19ம் வட்டாரத்தில் முஸ்லிம் கல்லூரி வீதி வரிமதிப்பு இல.42 கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி.தங்கராஜா 09.03.2011 ஆம் திகதியிடப்பட்டு அளந்து வரையப்பட்ட 4313ம் இலக்க படத்தில் துண்டு 1 எனச் சுட்டியபடி விஸ்தீரணம் குளி (1.19) ஒன்று தசம் ஒன்று ஒ்ன்பதும் கொண்ட கடைக் கட்டடமும் அதற்குரியவைகளும் இதன் எல்லைகள்

வடக்கு:- இப்ராகிம் ரஸிதாவின் ஆதனம்.

கிழக்கு:- குணரட்ணம் பெண் சுகந்தியின் ஆதனம்.

தெற்கு:- சதீஸ்குமார் ரஜினியின் ஆதனம்.

மேற்கு:- முஸ்லிம் கல்லூரி.

இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது தியாகராஜா விக்கினேஸ்வரன் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தியாகராஜா விக்கினேஸ்வரன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி 7, 8 ஆம் திகதிகளில் ஐ.பி.எல் மெகா ஏலம்

## பி.சி.சி.ஐ. தகவல்




அடுத்த ஆண்டு நடைபெற வுள்ள ஐ.பி.எல்.தொடருக்கான மெகா ஏலம் எதிர்வரும் பெப்ர வரி 7 மற்றும் 8 ஆகிய திகதி களில் நடத்த திட்டமிட்டிருப்ப தாக பி.சி.சி.ஐயின் மூத்த அதி காரி ஒருவர் தெரிவித்தார். மொத்தம் 10 அணிகள் பங்கு பெறும் இந்த ஏலத்தை பெங் களூரில் நடத்துவதற்கான ஏற் பாடுகள் நடைபெற்று வருவதா கவும் அவர் கூறினார்.

2022 ஆம் ஆண்டு ஐ.பி. எல்.தொடரில் வழக்கமாக பங்கேற்கும் எட்டு அணிக ளுடன், இரண்டு புதிய அணி கள் இடம்பெறுகின்றன. இதற் காக ஏற்கனவே உள்ள அணி கள், அதிகபட்சமாக 4 வீரர் களை மட்டும் தக்கவைத்துக் கொண்டு மற்ற வீரர்களை விடுவித்துள்ளன. இரண்டு புதிய அணிகளும் ஏலத்திற்கு முன்பாகவே 3 வீரர்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என பி.சி.சி.ஐ. தெரிவித்தது.

இருப்பினும் மெகா ஏலம் குறித்து பெரும்பாலான அணி உரிமையாளர்கள் அதிருப் தியை தெரிவித்துள்ளனர். ஒரு அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு ஒன்றாக இணைந்து விளையாடவே சில ஆண்டுகள் ஆகும். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அணி முழுவதையும் கலைத்து மெகா ஏலம் நடத்து வது அணி களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தனர். (4-6)



இலங்கை கராத்தே தோ சம்மேளத்தினால் கடந்த 18 ஆம் திகதி கொழும்பு டொறின்ரனில் அமைந்துள்ள கராத்தே சம்மேளன உள்ளக அரங்கில் நடைபெற்ற தேசிய டிப்ளோமா தேர்வில் வடமாகாண கராத்தே சம்மேளன தலைவர் சென்சே சின்னத்துரை விஜயராஜ் 7 ஆவது கறுப்புப் பட்டி பெற்றுள்ளார்.



2021 இற்கான இலங்கை கராத்தே தோ சம்மேளனத் தினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான இணையவழி கராத்தே சுற்றுப்போட்டியில் ISSKA கராத்தே கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 13 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். அத்தோடு கழகங்களுக்கிடையில் சர்வதேச ரீதியில் இணையவழி ஊடாக நடைபெற்ற கராத்தே போட்டியிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பல பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். இம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிப்பு அண்மையில் கொழும்புத்துறை ஜெட்லேணர்ஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2476

### மாலினி

ஒவ்வொரு அரிசியிலும் நம்ம பேரை வேனா கடவுள் எழுதலாம்.. ஆனால்..,



அது பிரியாணியா?... பழைய சோறான்னு முடிவு பண்றது பொண்டாட்டி தான்

### சிவம்




தூங்காதே தம்பி தூங்காதே! சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!




கண்ணா நீ தூங்கடா! என் கண்ணா நீ தூங்கடா!

### சுரேன்

2021 உம் முடியப் போகுது எப்படி போச்சே என்று தெரியல...




ஏன் ஒரு வருடசமா கோமாவிலயா இருந்தாய்?

### லோஜி




### சுமி

அப்பனே முருகா 11 மாதம் ஊசுரோட வைச்சிருக்க..



மீதி இருக்க 9 நாட்களையும் நல்ல படியாக 2022 ஐ பாக்க வைத்திடு

### யாழினி

மனைவியிடம் சொல்லக்கூடாதது?.. இது தப்புமா...



கணவனிடம் சொல்லக்கூடாதது?... இன்னைக்கு உப்புமா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

24.12.2021
மார்கழி 09, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 4.30 மணிவரை
மகம் பின்னிரவு 1.45 மணிவரை
சுபநேரம் 6.26-7.56 மணிவரை
இராகு காலம் 10.56-12.26 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தராடம், திருவோணம்

வளவன்

**மேஷம்**: சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், வழிபாடு திருப்தி தரும்.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழி யில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**: குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், கலகலப் பான செய்திகள் வந்து சேரலாம், நன்மை கள் நடைபெறும் நாள்.

**சிம்மம்**: அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**: அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்**: முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாரத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**விருச்சிகம்**: செய்தொழில் மேன்மையுண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**தனுசு**: உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**: சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் நிதானம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**: மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**: சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற லாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள் ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

நீ கோபப்பட்டால் உனக்குச் செலவு அதிகமாகும்

# விலை அதிகரிப்பிற்கு எதிராக வலி.மேற்கு பிரதேச சபை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**பொருட்களின் விலைவாசி அதிகரிப்பிற்கு எதிராக வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

பிரதேச சபையின் 46 ஆவது பொதுக்கூட்டம் நேற்று உப தவிசாளர் சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபையின் உறுப்பினர்களது கோரிக்கைக்கு அமைவாக இந்த போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.



போராட்டக்காரர்கள் "இன்னொரு சோமாலியா போன்று இலங்கையை மாற்றாதே, அப்பாவி மக்களின் வயிற்றில் அடிக்காதே, நாங்கள் என்ன நாட்டினை விட்டு வெளியேறுவதா, வீடுகளில் குண்டுகளை வெடிக்க வைக்காதே, எரிபொருட்களின் விலையேற்றத்தை குறை, அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையை குறை" என்ற கோசங்களை எழுப்பி பதாகைகளை தாங்கிய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-33-104)


## கண்ணீர் அஞ்சலி



அமரர். செல்லத்துரை பழனிவேல்

பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை ஆற்றும் திருமதி.உமாபதி சாந்தினி அவர்களின் அன்புத் தந்தை அமரர்.செல்லத்துரை பழனிவேல் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(9199)

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.



## University of Jaffna
## Vacancy - Post of Temporary Demonstrator
## Faculty of Medicine

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from the State Universities or UGC recognized foreign Universities. *(Priority will be given to the MBBS graduates. Research experience in the relevant fieldis preferable)*

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applications with scanned copies of candidates should be sent **on or before Tuesday,28.12.2021**to the following email address:**fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.


Selection interview for the above post will be held via online on **Thursday, 30th of December 2021 at 2.00pm** for eligible candidates with notice by email.

Registrar
University of Jaffna.

(c-3338)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவிலில் வர்த்தகர் வீட்டில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்



(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திற்கு அண்மையாக உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டு வளாகத்துக்குள் புகுந்த கும்பல் ஒன்று அட்டூழியத்தில் ஈடுபட்டது.

வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்று உப்புமடச் சந்தியில் போட்டு சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

3 மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் வந்த வன்முறைக் கும்பலே தாக்குதலை மேற்கொண்டதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் அலைபேசி வர்த்தக நிலையத்தை நடத்தி வருபவரின் வீட்டிலே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-33)

## முகாமைத்துவப் போட்டி

# நெல்லியடி கிராம உத்தியோகத்தர் முதலாமிடம்

(குப்பிழான்)

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பிரதேச மட்டத்தில் நடைபெற்று முடிந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவப் போட்டி முடிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 50 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அவற்றில் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/376 நெல்லியடி கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் பா.வைகுந்தன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மருதங்கேணிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/423 நாகர்கோவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் அ.விமலேசன் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/332 கெற்பேலி கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் க.தனேஸ்வரன் ஆகியோர் இரண்டாமிடத்தையும், உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/183, உடுவில் தென்கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் இ.யூயின் மசனட் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். (4-5-18)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நமகேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்கக் கதையாடல் நிகழ்வின் 64 ஆவது கதையாடல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 360 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 900 | 800 |
| தக்காளி | 400 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 340 | 350 | 350 | 400 |
| கரட் | 300 | 460 | 450 | 550 |
| பூசணி | 60 | 70 | 70 | 100 |
| புடோல் | 300 | 300 | — | 360 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-200 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 220 | 280 |
| பாகற்காய் | 600 | 480 | 450 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 140 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 340 | 300 | 400 |
| பீற்றூட் | 280 | — | — | 400 |
| கறிமிளகாய் | 600 | 750 | 750 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 380 | 350 | 340 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | — | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-80 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 260 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | — | — |
| முள்ளங்கி | 200 | 200 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 80 | [illegible] | 50 | 40 |
| ஈரப்பலா | 60 | 100 | 80-100 | 120 |

# மார்கழிப் பெருவிழா-2021

## மார்கழித் திங்கள் 10ம், 11ம் நாள்

### இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென் தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னோடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10 ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பா 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடந்த திருவருள் கைகூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 10 ம் நாள் சனிக்கிழமை (டிசெம்பர் 25)**
**அப்பர் சுவாமிகள் அமர்வு**

காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை
**துவக்க உரை:** சிவத்திரு.தென்னவன் பார்த்தீபன்
(நிறுவுனர் -தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
**தலைமை உரை:** பேராசிரியர் சிவத்திரு.சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா
(துணைவேந்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)
**திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்) :**
சிவத்திரு.நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
**தொண்டு நெறி :** தமிழ்நாடு மதுரை
சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தல் :** மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**சம்பந்தர் சுவாமிகள் அமர்வு**

மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை
**தலைமை உரை :** சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம்
(முதன்மை ஆசிரியர் வலம்புரி நாளிதழ்)
**திருமுறை விண்ணப்பம் (சம்பந்தர் தேவாரம்) :**
கலாநிதி. திருமதி.சுகன்யா, அரவிந்தன் குழுவினர்
**மகன்மை நெறி:** தமிழ்நாடு மதுரை
சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா
**அடியார் பெருமை:** ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு
**நன்றியுரை:** சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன்
(பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

**மார்கழித் திங்கள் 11ம் நாள்**
**ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 26)**
**சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு**

காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை
**துவக்க உரை :** சிவத்திரு.ஜெயபாலன் தவேதன்
(ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)
**தலைமை உரை:** சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன்
(செயலாளர் - கல்வி அமைச்சு வடமாகாணம்)
**திருமுறை விண்ணப்பம்** (சுந்தரர் தேவாரம்)
சிவத்திரு சிவநாதன் பிரதீபன்
**தோழமை நெறி :** தமிழ்நாடு மதுரை
சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தால் :**
மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு**

மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை
**தலைமை உரை** - சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன்
(அரசாங்க அதிபர்- யாழ்.மாவட்டம்)
**திருமுறை விண்ணப்பம் (திருவாசகம்) -**
சிவத்திரு. பத்மநாதன் சிவமைந்தன்
**அன்பு நெறி** - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா
**கௌரவிப்பு நிகழ்வு** - தொகுப்பு சிவத்திரு தில்லையம்பலம் கௌரீசன்
(பொருளாளர் - சைவ மாணவர் சபை)
**நன்றியுரை** - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர்- சைவ மாணவர் சபை)

**அணிசெய் இசைக் கலைஞர்கள்**

**மிருதங்கம்** - சிவத்திரு. மகேந்திரன் லோகேந்திரன்
**வயலின்** - சிவத்திரு. கேதீஸ்வரன் வேலதீபன்
**புல்லாங்குழல்** - சிவத்திரு.கமலநாதன் தேசிகன்
**முகர்சிங்கு** - சிவத்திரு.கந்தசாமி நந்தகுமார்
**நிகழ்ச்சித் தொகுப்பு :** சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 221 2739/ 075 653 3111**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்க தீர்மானம்

(கொழும்பு)

12 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம், 16 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இந்த நிலையில், 20 வயது இற்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்கு வதற்கான நடவடிக்கை அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# 2022 ஆம் ஆண்டு அரசாங்கம் கவிழும் ஆண்டாக இருக்கும்

## எதிர்க்கட்சி

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு அரசாங்கம் கவிழும் ஆண்டாக இருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு தற்போதைய அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க அனுமதிக்க முடியாது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதுடன் உரப் பிரச்சினையின் விளைவாக காய்கறிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும். கொடுக்கப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்ப அரசாங்கத்திற்கு அதிக வாய்ப்புகளை வழங்க முடியாது.

மக்கள் போராட்டங்கள் அரசாங்கத்தை கவிழ்க்கக்கூடும் என்பதை வரலாறு காட்டியுள்ளதால் அரசாங்கத்தை கவிழ்க்க தேர்தல் தேவையில்லை. அடுத்த ஆண்டு எழுச்சிக்குத் தயாராகுங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(நி-5)

# பாராளுமன்றில் கடதாசி பாவனையை குறைக்க தீர்மானம்-சுற்றாடல் அமைச்சர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தினுள் கடதாசி பாவனையைக் குறைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றம் கூடும் அனைத்து நாட்களிலும் மேசைகளில் அதிகளவிலான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் கடதாசிகள் என்பன காணப்படுகின்றன.



அதனடிப்படையில், பாராளுமன்றத்தினுள் கடதாசி பாவனையைக் குறைப்பதற்கான புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பது தொடர்பில் சபாநாயகருக்கு யோசனையொன்றை முன்வைக்கவுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# 1917 ஐ அழைக்கவும்

(கொழும்பு)

எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகள் அல்லது சட்டவிரோதமான சொத்துக் குவிப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு பொதுமக்கள் 1917 என்ற இலக்கத்திற்கு குறுஞ் செய்தி அனுப்ப முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகளை ஏற்க 1917 என்ற எண் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

பல வழிகளில் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு பல்வேறு நபர்கள் சொத்துக்களை குவித்துள்ளதை அவதானித்ததை அடுத்து இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)


மணிவிழா நாயகியை

அகம் நிறைந்து வாழ்த்துகின்றோம்




திருமதி.

கலைச்செல்வி ஜெயராஜ்

சேவை விபரம்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
11.01.1993-31.03.2004

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
01.04.2004-15.02.2015

யா/இந்து மகளிர் கல்லூரி
16.02.2015-24.12.2021

கவினுறு கல்வி நலம் நானிலத்தில் பெற்று
பயனுறு ஏற்றம் பல இவ்வுலகில் கண்டு
வித்தகியாய் நல்லாசானாய் பட்டம் புகழ் பெற்று
ஆசிரியப் பணியில் அகவை அறுபதின் நாயகியாய்!
தார் கரம் கொண்டு மாணவிகள் நினைந்து போற்ற
அறிவுடைப் பெரு மக்காள் ஓங்கி ஒலித்திடும்
வாழ்த்தொலி நீர் கேட்டிடுவீர்!

சைவமும் தமிழும் ஒன்றென்று ஓங்கி உரைத்திடுவீர்
சொல்லெடுத்து பா இசைத்து சொல்லம்பு பாய்ச்சிடுவீர்
கவியோ கட்டுரையோ மறுப்பின்றி வழங்கிடுவீர்.
அனுபவ மழையை அள்ளி என்றும் இறைத்திடுவீர்
மூன்று தசாப்தமாய் ஓய்வின்றி உழைத்திட்டீர்
வகுப்பறைகள் ஓய்வெடுக்க அனுமதி மறுத்திட்டீர்
நோய் என்று கூறி விடுப்பெடுப்பதனை தவிர்த்திட்டீர்
வஞ்சின வார்த்தை சுட்டெரித்தால் விம்மி அழுதிடுவீர்

நதி மூலம் ரிஷி மூலம் தேடிப் பொருள் கண்டிடுவீர்
உள்ளத்தில் ஓய்வின்றி யதார்த்தமாய் பேசிடுவீர்
இணையத்தில் இலாவகமாய் உள்நுழைந்தும் வருகின்றீர்
வாழ்த்துகள்... அப்பாடா... வாழ்த்துரைகளாய் வழங்கிடுவீர்
குழந்தை என உளம் கொண்டு குதூகலித்து பேசிடுவீர்
குறும்புக் கதை கூறி கலகலவென்று சிரித்திடுவீர்!

ஆற்று மணலிலும் பன்னாள் - நீரும்
நும் குடும்பமும் பல்லாண்டு வாழி வாழி!

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.

(c-3329)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோ
# உயர்திரு. N.P.ஸ்ரீந்திரன் அவர்க
## சேவை நயப்பும் அகவை அறுபது மணிவிழா சிறப்பு



### அருளாசியுரை

மணிவிழாக்காணும் சைவப் பற்றாளர் திரு. N.P.ஸ்ரீந்திரன் அவர்கள் மணிவிழா காணும் இந்நாளில் அவரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

ஆசிரியத்துவம்என்பது மிக உன்னதமான பணி. அந்த உன்னத பணியைச் செவ்வனே செய்து நல்மாணாக்கர் பலரை உயர்வித்த பெருமை மணிவிழா நாயகனை நிறைந்துள்ளது. மணிவிழா நாயகன் தனது குடும்பத்துடன் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
இரண்டாவது குரு மகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.



### வேலன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

வலிகாமம் கல்வி வலயத்தில் சமயபாட ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி இன்று 24.12.2021 மணிவிழாக் காணும் ஆசிரிய ஆலோசகர் N.P. ஸ்ரீந்திரன் ஐயா அவர்கள் கடந்த 36 வருடங்களாக ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தனது சேவைக்காலத்தில் பல மாணவர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளார். அத்துடன் மருதனார்மடத்தில் ஸ்ரீஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலையை உருவாக்கி அதன் பொறுப்பாளராக இருந்து அக்கிராமத்துச் சிறார்களின் அறநெறி மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளார். மேலும் பல நிறுவனங்களுடன் இணைந்து சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றமை சிறப்பாகும். அத்துடன் அவரது எழுத்துத்துறை ஆர்வத்தினால் கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்கள் மூலம் சமுதாய விழிப்புணர்வை வளர்த்து வருகின்றார்.

திரு.ஸ்ரீந்திரன் ஐயா அவர்கள் அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் தனது ஓய்வுக்காலத்தில் மேலும் சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு குறிப்பாக எமது வளர்ந்து வரும் இளம் சமூகம் அறநெறிகளுக்கு உட்பட்டு நல்லதோர் சமுதாயம் உருவாகத் தொண்டாற்ற வேண்டும் என்பதே எமது அவா. அவரது ஓய்வுக்காலம் அமைதியாக, ஆனந்த மாகக் கழியவும் இன்று வெளிவரும் மலர் சிறப் பாக வெளிவரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல நல்லைக்கந்தப் பெருமானை வேண்டுதல் செய்கின்றோம்.

அன்பே சிவம் இறைபணியில்
**தவத்திரு வேலன் சுவாமிகள்,**
சிவகுரு ஆதீனம், யாழ்ப்பாணம்.



### தாய்த்தமிழிற்கு பெரும் பணிபுரிபவர்

ஈழமணித் திருநாடு சைவமும் தமிழும் ஒருங்கே செழித்து வளரும் தேசம். இது சிவபூமி எனச் சிறப்பிக்கப்படுகிறது. கந்த புராணக் கலாசாரத்தைத் தன்னகத்தே கொண்டிலங்குவது. இப்பின்னணியில் சைவத்திற்கும் கல்விக்கும் தாய்மொழியாம் தமிழுக்கும் பெரும் பணி புரிந்து வருகின்றவர் திரு.N.P. ஸ்ரீந்திரன்.

ஓர் ஆசிரியராக ப/தொட்டுலாகல க. வித்தியாலயத்தில் கற்பித்தலை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பணிபுரிந்து பின் ஆசிரிய ஆலோசகராக தென்மராட்சியிலும் வலிகாமக் கல்வி வலயத்திலும் பணிபுரிந்துள்ளார். ஈழத்து மரபு வழிப் புலமையாளர்களின் வழிநின்று சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்கள் எனப் போற்றி கல்விப்புலத்தின் வழி பெரும்பணியாற்றி வருகின்றார்.

சமகாலத்தில் ஆலயங்கள் பலவற்றிலும் பிரசங்கம் செய்து வருவது இதற்குச் சான்றாகும். சைவச்சிறார்கள் மத்தியிலும் பெரியவர்கள் மத்தியிலும் தம் சமயம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பலவிதமான செயற்றிட்டங்களை இவர் முன்னெடுத்து வருவது யாவரும் அறிந்ததே. மணிவிழாக்காணும் இவர் இனிவரும் தன் வாழ்நாளை சைவத்துக்கும் தமிழுக்குமாய் மேலும் மேலும் அர்ப்பணித்து ஆரோக்கியமும் மனநிறைவான வாழ்வையும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. திருமதி.
**சுகந்தினி சிறிமுரளிதரன்,**
பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### மணிவிழா வாழ்த்து

வலிகாமம் கல்வி வலயத்தின் இந்துசமய பாட ஆசிரிய ஆலோசகரும் வடமாகாணத்தின் முதுபெரும் சைவத்துறை கல்வியாளருமான சைவப்புலவர் திரு. N.P.ஸ்ரீந்திரன் அவர்களின் அகவை அறுபதை அடைந்திட்ட ஆளுமையினைக் கொண்டாடும் மணிவிழாவிற்கு வாழ்த்துக்கள் வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

சைவசித்தாந்த முதுமாணிப்பட்டத்துடன் சைவமும் தமிழும் தழைத்தோங்க 36 வருடங் கள் சேவைபுரிந்த சைவநெறியோனை பாராட்டல் பெருமிதம் மிக்கது. கவிஞராகவும் கட்டுரையாசிரியராகவும் பிரதம பரீட்சகராகவும் வாண்மை விருத்திக்கு வழி செய்த சைவச்செந்நெறி நின்ற வாண்மையாளரை மனம் நினைத்து வாழ்த்துகின்றேன். இவரின் சேவையில்இந்து சமயம் இந்துநாகரிகம் தமிழ்போன்ற பாடங்களை கற்றுத்தேறிய பல மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை சென்று சிறப்புப் பெற்றுள்ளனர். ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துக்கள்.

**முத்து இராதாகிருஷ்ணன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

ஆசிரிய ஆலோசகரும் சைவ சமய ஆர்வலரும் சிவசேனை அமைப்பின் செயலாளருமான உயர்திரு.N.P.ஸ்ரீந்திரன் அவர்களின் மணிவிழா மலருக்கான நல்லாசி கூறி வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றோம். தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் கடந்த 36 ஆண்டுகள் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

சைவசமயத்தின் மீது அதிக ஆர்வமுள்ள இவர், திரு. மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களுடன் இணைந்து சிவசேனை அமைப்பின் ஊடாக நற்பணியாற்றி வருகின்றார். எழுத்தாளரும் பேச்சாளருமான இவர் மேலும் சைவசமயத் தொண்டையும் தமிழ் மொழிக்கான சேவையையும் தொடர்ந்து நிறைவாக ஆற்றவேண்டும் என்று இறையருளை வேண்டுவதோடு அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிகளில் பங்களித்துவரும் இவர் எதிர்காலத்தில் சிறுவர்களின் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொள்ளவேண்டும் என வேண்டி அமைகிறேன்.

கலாநிதி **ஆறு.திருமுருகன்,**
உப தலைவர், அகில இலங்கை
இந்துமாமன்றம்.



### மிகச் சிறந்த ஆளுமையாளன்

யாழ்ப்பாணத்தில் இருபது வருடங்களாக ஆசிரியராக விளங்கி வருபவரும் வலிகாமம் கல்வி வலயத்தில் பதினாறு வருடங்களாக ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி வருபவருமாகிய ஆசிரிய ஆலோசகர் திரு. N.P. ஸ்ரீந்திரன் 24.12.2021 இன்று மணிவிழாக் காணவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைவதோடு அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நல்லாசிகள் உரித்தாகுக.

திரு.ஸ்ரீந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்ற பட்டதாரியாவார். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்.

பல்கலைக்கழகத்தில் என்னிடம் கல்வி பயின்ற மாணவர்களில் ஒருவராவார். எம்மீது மிகுந்த குருபக்தி கொண்டவர். செய்நன்றி மறவாத பண்பாளர். தமது ஆசிரியப் பணிக்கு மேலதிகமாக அவர் "சரசாலையூரான்" என்ற புனைபெயர் கொண்ட கவிஞராவார். கவிதைகள் புனைவதில் மிக்க ஈடுபாடுடையவர்.

அத்துடன் பத்திரிகை எழுத்தாளராகவும் "இந்துக்களின் குரல்" என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்குகின்றார். சிறந்த சொற்பொழிவாளர்.

திரு.ஸ்ரீந்திரன் தமது வாழ்வில் நற்சுகத்துடனும் ஆற்றலுடனும் மகிழ்ச்சியுடனும் விளங்கவும் சகல வளங்களுடன் இனிதே வாழவும் ஆருத்திரா தரிசனம் நிகழும் இவ்வேளையில் அவருக்கும் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல தில்லை நடராஜப்பெருமானின் திருவருள் பொலிவ தாகுக என எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்,** வாழ்நாள்
பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### ஆளுமை நிரம்பிய ஆசிரிய ஆலோசகர்

உயர்திரு. N.P.ஸ்ரீந்திரன் அவர்களின் மணிவிழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில்மட்டற்ற மகிழ்ச்சிடைகின்றேன். ஆசிரிய சேவையில் இருபது வருடங்களையும் ஆசிரிய ஆலோசகர் சேவையில் பதினாறு வருடங்களையும் பூர்த்தி செய்து அப்பதவிகளை அலங்கரித்தது மட்டுமன்றி அப்பதவிகள் இவரால் புகழ்பெற் றன எனக் கூறினால் அதில் மிகையாளனும் இல்லை.

விழா நாயகர் ஸ்ரீந்திரன் அவர்கள் பன்முக ஆளுமை கொண்டிருப்பதனால் பல சமூக , சமயப் பணிகளில் ஈடுபட்டிருப்பதனைக் காணமுடியும். ஸ்ரீஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியராகவும் "இந்துக்களின் குரல்" சஞ்சிகையின் நூலாசிரியராகவும் கடமையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுச்செயலாளராகவும் இலங்கை சிவசேனை அமைப்பின் செயலாளராகவும் பணியாற்றி வருவதனால் இலங்கையில் இடம்பெறும் மதமாற்றங்களைத் தடுத்து நிறுத்தும் வல்லமை கொண்டவராகவும் இருந்து வருகின்றார்.

எமது நண்பராகவும் அயலவராகவும் இருக்கும் திரு.ஸ்ரீந்திரன் அவர்கள் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அருளால் எல்லாச் செல்வங்களும் கைவரப்பெற்று நல்ல உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வளமுடன் என வாழ்த்தும்
**பேராசிரியர் க.தேவராஜா,**
முன்னாள் பீடாதிபதி, முகாமைத்துவ
கற்கைகள் வணிக பீடம், யாழ்ப்பாணம்.



### சைவப்பணி தொடரட்டும்

மணி விழா காணுகின்ற திருவாளர் N.P. ஸ்ரீந்திரன் அவர்கள் நீண்ட பாரம்பரிய சைவசமய வழித்தோன்றலாகத் தோன்றியவர். சைவ விழுமியங்கள் போற்றுவ தற்குரிய சமய தீட்சை பெறுதல், உருத்திராக்கம் அணிதல் அறநெறி பாடசாலைகளை நிறுவி தமிழ், சமயம், சமய மேம்பாடு, கலை, சங்கீதம், பண்ணிசை, போன்றவற்றை மாணவர்கள் மூலம் வெளிக் கொணர்ந்து மாணவர்களை நற் பிரஜைகளாக மிளிரச் செய்தவர், செய்து கொண்டிருப்பவர்.

இன்று ஓய்வு நிலை அடைகின்ற இப் பெரியார், சமூகத்திற்கு வேண்டிய தொண்டுகளையும் சமயப் பணிகளையும் மேலும் தொடர்ந்து ஆற்ற வேண்டும். அதற்கு மென்மேலும் அறிவாற்றல் தைரியம், தேக ஆரோக்கியம் கிடைக்க வேண்டுமென்று ஆஞ்சநேய சுவாமியினை பிரார்த்தித்து என் நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"லோஹா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா, பிரதம சிவாச்சாரியார்
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்



### சேவைநலன் பாராட்டு மடல்

திரு. N.P. ஸ்ரீந்திரன் அவர்கள் இந்துசமய ஆசிரியராக இருபது வருடங்களும் பதினாறு ஆண்டுகளாக ஆசிரிய ஆலோசகராகவும் சிறப்பான பணிகளாற்றி தனது அகவை அறுபது வயதினை பூர்த்தி செய்து ஓய்வுக் காலத்தினுள் கடந்து செல்கின்ற இவ்வேளையில் அவரின் அர்ப்பணிப்பான ஆசிரியப்பணியையும்சமய சேவைகளையும் நான் அறிந்து கொண்டேன்

இந்துசமய பாடவிதானத்திற்குட்பட்ட விடயங்களோடு கலாசார மற்றும் சமய அனுஷ்டானங்கள் பற்றிய அறிவையும் மாணவர்கள் மத்தியில் புகுத்தியதோடு சமய விழாக்கள் ஊடாக மாணவர்களின் ஆன்மிக வளர்ச்சிக்கும் பண்பான வாழ்விற்கும் வழிவகுத்துள்ளார் என்பதனை என்னால் அறியக் கூடியதாக உள்ளது.

அரச சேவையிலிருந்து ஓய்வினைப் பெற்றாலும் அவரின் சமய, கலாசாரப் பணிகளை மேலும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் தொடர எல்லாம் வல்ல இறையாசியினை வேண்டுவதோடு அவரின் எதிர்காலம் சமாதானத்தோடும் உடல், உள நலத்தோடும் இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.

**எஸ்.எம்.சமன் பந்துலசேன,**
பிரதம செயலாளர், வடமாகாணம்.



### மணிவிழா வாழ்த்து

வலிகாமம்கல்வி வலயத்தின் இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு N.P.ஸ்ரீந்திரன் அவர்களை வாழ்த்துவதில் உவகையடைகின்றேன். ஆசிரியராக தனது அரச சேவையினை தொடங்கி 20 ஆண்டுகள் ஆசிரிய பணியினை மேற்கொண்டுள்ளதுடன் 16 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராக தனது பணியினை மேற்கொண்டுள்ளார்.

இந்து சமய பாடத்தின் ஆசிரிய ஆலோசகராக வலயத்தின் சமய பாடத்திற்கான முன்னேற்றத்தில் தனது பங்கினை சிறப்புற ஆற்றியுள்ளார்.

அந்தவகையில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரிய ஆலோசகர் தனது ஓய்வுக் காலத்தினை சகல சிறப்புக்களுடனும் மகிழ்ச்சியாக களிப்பதற்கு இறைவனின் அருளாசிகள் கிடைப்பதற்காகப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்,**
செயலாளர், கல்வி அமைச்சு வடமாகாணம்.



### மணிவிழா வாழ்த்துப் பாமாலை

தரையிலாக் கல்வியினை
முறையாய்க் கற்று
கல்லூரித் தாயவளின்
மைந்தனாகி
உரைசாலும் உத்தமனாய் ஏற்றம் பெற்று
களங்கமிலாக் கல்வியினைப் போதிக்கின்ற
நிறைவான குணமுடை ஆசானாகி
படித்துயர்ந்த கல்லூரிக்கே சேவையாற்ற
விரைந்து வந்தே பணி செய்த ஆசான் வாழி
விண்ணளந்த பெருமையுடன் வாழி வாழி

ஒப்பரிய சேவையினால் உயர்ந்து நின்று
வலிகாம வலயத்தின் சமய பாட
செப்பரிய ஆசிரிய ஆலோசகர் பதவி தாங்கி
அளப்பரிய சேவை செய்த ஐயா வாழி
தப்பாமல் கண்ணியமாய்ச் சேவை செய்து
தடம்பதித்த சான்றோனே வாழி வாழி
எப்போதும் உங்கள் சேவை வாழி
பார்மிசையில் பல்லாண்டு வாழி வாழி

**திரு.செ.பேரின்பநாதன்** (அதிபர்)
யா/டிறிபேக் கல்லூரி.
சாவகச்சேரி.

(C-3339)



### பல் புலமையாளன் எங்கள் ஆசான்

கல்வி உலகு என்றும் நினைவில் கொள்ளும் நாமம் நல்மனிதன் ஆசிரிய ஆலோசகர் திரு. N.P. ஸ்ரீந்திரன் நாமம் ஆகும். 36 ஆண்டுகள் கல்விப் புலத்தில் பணியாற்றி இப்போது ஓய்வு பெறும் அவரின் பணி மகத்தானது, என்றும் மறக்கவியலாதது.

நடராசா தெய்வநாயகி தம்பதியருக்கு ஆறாவது புதல்வராக 1961 டிசெம்பர் 6 இல் பிறந்த இவர் தவழ்ந்த மண் சரசாலையாகும். யா/ சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயத்திலும் கிளி/ பரந்தன் மகா வித்தியாலயத்திலும் ஆரம்பக் கல்வியைப் பயின்று சாதாரண தரம் மற்றும் உயர்தரக் கல்வியை யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் கற்று உயர்நிலை பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, சைவ சித்தாந்த முதுமாணிப்பட்டம், என்பவற்றையும் அங்கேயே பெற்று உயர்கல்வித் தகைமையுற்றார். 1985 இல் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று இருபதாண்டு காலம் ஆசிரியப் பணியை அலங்கரித்தார். ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் சைவநெறி, இந்து நாகரிகம், இந்து சமயம், தமிழ் போன்ற பாடங்களை மாணவர் மனம் மகிழக் கற்பித்தார். இக்காலப்பகுதியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளராகவிருந்து ஆசிரியர்களின் உரிமைகளுக்காய் உரத்த குரல் கொடுத்தார்.

2005 ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று சில மாதங்கள் தென்மராட்சி வலயத்திலும் பின்னர் இன்றுவரை 16 ஆண்டுகள் வலிகாமம் கல்வி வலயத்திலும் தன்பணி தொடர்ந்தார். இக்காலத்தில் சைவசமயராக எப்படி ஒருவன் வாழவேண்டும் என ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். சைவநெறிப்பாடத்திற்கான வினாவிடைப் பயிற்சிப் புத்தகம், ஆசிரியர்களுக்கு பாடக்குறிப்புப் புத்தகம், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புத்தகம் போன்றவற்றை வெளியீடு செய்தார், மேலும் சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகளுக்கு பிரதம பரீட்சகராக 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால சேவை அனுபவம் கொண்டிருந்தார்.

ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்த காலத்தில் மாணவர்களின் சமய விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கங்களுக்காக பாட மேம்பாட்டுச் செயற்றிட்டத்தினை ஐந்து ஆண்டுகளாகச் செயற்படுத்தி வருகின்றார். வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் செயலாளராகவும் வலிகாமம் கல்வி வலயத்தின் நலன்புரிச் சங்கச் செயலாளராகவும் இருந்து செயல்புரிந்தார்.

கல்விப் புலத்திற்கு அப்பால் சாவகச்சேரி முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளராக கடமையாற்றிய அதேவேளை இன்றுவரை மருதனார்மடம் ஸ்ரீஆஞ்சநேயர் அறநெறிப்பாடசாலையின் பொறுப்பாசிரியராக இருந்து பெரும்பேறென அறநெறி போதித்து வருகின்றார். மேலும் இலங்கை சிவசேனையின் யாழ். மாவட்டச் செயலாளராகவிருந்து மதமாற்றத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றார்.

இலங்கை இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் உபசெயலாளராகப் பணியாற்றுகின்றார். "இந்து தமிழ்க் குரல்" என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து வெளியிட்டு விநியோகித்து வரும் ஸ்ரீந்திரன் சிறந்த கவிஞர் என்பதோடு கட்டுரை ஆசிரியராக, ஊடகவியலாளராக இருந்து சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றார். நீதி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் மத்தியஸ்தர் சபைக்கான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சைவப்புலவரான திரு.N.P.ஸ்ரீந்திரன் இன்றுவரை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இந்து சமய ஆசிரியர் கழகத்தின் தலைவராகவும் இருந்து மகத்தான பணியை ஆற்றி மாண்புறும் இவ்வேளை நாமும் அவரின் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**செயலாளர், இந்து சமய ஆசிரியர் கழகம் சார்பாக.**



### இந்து சமய விழுமியங்களை விதைத்தவர்

சைவசமய பாரம்பரியம், பண்பாடு பழக்கவழக்கங்கள் அருகி வரும் சூழலில் சமய விழுமியங்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் சமய ஆசிரியர்கள் வழிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய வழிப்படுத்தலை திரு. N.P.ஸ்ரீந்திரன் அவர்கள் எமது வலயத்தில் மேற்கொண்டிருந்தார். இதன்மூலம் இந்து சமய விழுமியங்களை ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் விதைத்துள்ளார். சமயப் போட்டிகளை நடத்தினார். பண்ணிசையை மாணவர்களிடத்தில் பரவச் செய்ய ஆசிரியர்களை வழிப்படுத்தினார். சமயபாட அடைவினை உயர்த்துவதற்கு முன்னின்று செயற்பட்டார். இவ்வாறு எமது வலயத்தினதும் சமயத்தினதும் வளர்ச்சிக்குப் பாடுபட்ட திரு N.P. ஸ்ரீந்திரன் அவர்களுக்கு எனது மணிவிழா நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஓய்வுக் காலத்தில் சகல வளங்களும் பெற்று மகிழ்வுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**பொ. ரவிச்சந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்.
வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம், மருதனார்மடம்.

(C-3339)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லாசகர் களின் பு மலரும்-2021



### சிவசிந்தையருக்கு மணிவிழா

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி மற்றும் எம்.ஜி. ராமச்சந்திரன் இருவருக்கும் திருவாரூரில் தமிழ் கற்பித்தவர் தண்டபாணி தேசிகர்.

தண்டபாணிதேசிகர் தமிழ் கற்ற திண்ணைகள் தென்மராட்சித் திண்ணைகள். தென்மராட்சியில் பல ஆண்டுகள் தங்கியிருந்து தமிழ் கற்றவர் தண்டபாணி தேசிகர்.

தண்டபாணி தேசிகருக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தவர் தென்மராட்சியார் ம.க.வேற்பிள்ளை. பற்பல நூற்றாண்டுகளுக்கு ஊடாகத் தமிழையும் சைவத்தையும் காத்து வளர்த்துச் செழிப்புற்ற செஞ்சாலியாக்கிய தென்மராட்சியில் பிறந்தவர் ஶ்ரீந்திரன்.

சரசாலை கணேச வித்தியாலயத்தில் பெரும் தமிழ்ப் புலவர் கயிலாயபிள்ளை போன்றோரிடம் தமிழ் கற்றவர் ஶ்ரீந்திரன். சைவத்தைப் பயின்றவர் ஶ்ரீந்திரன். பண்பட்ட நிலத்தில் கார்த்திகையில் பூத்துக் குலுங்கும் காந்தள் மலர்கள் போல, செழித்த நிலத்தில் செஞ்சாலியாகும் நெற்கதிர்கள் போல, புலமைக்களமான தென்மராட்சி தந்த தமிழும் சைவமும் உலகுக்கு பயன்படுமாறு கார்த்திகையில் பிறந்து காலங்கள் ஊடாக வளர்ந்து வாழ்பவர் ஶ்ரீந்திரன்.

20 ஆண்டுகள் நல்லாசிரியராக, 16 ஆண்டுகள் சைவசமயக் கல்வி ஆலோசகராகக் கல்விக் கண்களைத் திறக்கும் கருத்தாராய் வாழ்ந்து வளம் பெருக்கியவர் ஶ்ரீந்திரன்.

அவரது செல்வ மகனும் சிவத்தமிழ்மகன் அவரது செல்வமகளும் சிவத்தமிழ் மகள். இவ்விரு மக்களையும் ஈந்து பெரிதுவக்கும் தாயும் மறவன் புலவைச் சேர்ந்த மாண்புறு மனைவியராகச் ஶ்ரீந்திரனுக்கு செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும் இல்லாளையும் இன்முகம் காட்டி இனிக்கப் பேசும் இரு மக்களையும் பெற்ற பெருமானார் ஶ்ரீந்திரன்.

இந்த ஆண்டு அவருக்கு மணிவிழா ஆண்டு. சிவ சிந்தையருக்கு மணிவிழா, சைவத்தின் சின்னத்திற்கு மணிவிழா, தமிழின் உணர்வுக்கு மணிவிழா, அருமைத் தந்தைக்கு மணிவிழா, அன்புக் கணவருக்கு மணிவிழா, ஆசிரியப் பெருந்தகைக்கு மணிவிழா, தொழிற் சங்கச் செயலாளருக்கு மணிவிழா, அறநெறிப் பாடசாலைகளின் ஒருங்கிணைப்பாளருக்கு மணிவிழா, சைவத்தின் எல்லைக் காவலருக்கு மணிவிழா, மதமாற்றத்தைத் தடுக்கின்ற மாபெரும் மனிதருக்கு மணிவிழா, மேலாக என் அன்புத் தோழருக்கு மணிவிழா.

மறவன்புலவு
**க.சச்சிதானந்தன்,**
சிவசேனை.



### அளப்பரிய சேவையாளன்

60 ஆவது அகவையில் விழாக்காணும் நாயகனைப் பற்றி ஒரு சில விடயங்களை கூறுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்காக எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த நாற்பது ஆண்டுகளாக விழா நாயகனுடன் நெருக்கமான உறவைக் கொண்டதனால் அவரின் தன்னலமற்ற சமுதாய சேவைகளை கூறுவதில் பெருமை அடைகிறேன். இந்து சமயமும் மருத்துவ சம்பந்தமான விடயமும் விழாநாயகனுக்கு இரு கண்கள் போன்றவை. ஆரம்ப காலத்தில் உச்சக்கட்டமான போர்ச்சூழலில் ஆசிரிய தொழில் கிடைத்தவுடன் மலையக மக்களுக்கு சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்துள்ளார். இதற்காக யாழ். மண்ணில் இருந்து இந்து சமய நூல்களை எடுத்துச் சென்று மலையக மக்களுக்கு இந்து சமய வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்தவர்.

சமூக சேவையை குறிப்பிட்டால் சிறுவர்களுக்கான இந்து சமய நன்னெறிகளை கவிதை வடிவில் கொண்டு வருவதற்காக நூல் வடிவில் தொகுத்து ஆயுள் கால தமிழ் பேராசிரியரான அ.பொ.சண்முகதாசனின் வெளியீடு ஒன்றை நடாத்தி (சோலைக்குயில்) சரசாலையூரான் என்ற பட்டத்தையும் பெற்றார்.

இந்து குருமார்களுக்கு தனித்துவ சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நாளாந்தம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் பின்தள்ளப்பட்ட இந்து மக்களின் வாழ்விடங்களுக்கு நடமாடும் மருத்துவ சிகிச்சை நிலையங்களை நடாத்துவதற்கு உழைத்துக் கொண்டிருப்பவர். இவ்வாறான இலட்சியக் கனவுகளை கொண்டுள்ள விழா நாயகன் தனது வாழ்நாளில் வெற்றி அடைய வேண்டும் என்ற நல்நோக்கோடு இறைவன் துணை புரிவாராக என்று வேண்டி எனது கருத்தினை நிறைவு செய்கின்றேன்.

**Dr.T. குகதாசன்**
சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்



### ஆசியுரை

மணிவிழாக்காணும் ஆசிரிய ஆலோசகர் திரு. N.P. ஶ்ரீந்திரனுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெரு உவகை கொள்கிறேன்.

திரு.ஶ்ரீந்திரன் அவர்கள் ஆசிரியராக தமது பணியை ஆரம்பித்து சிறப்பாக 20 வருடங்கள் அப்பணியை தொடர்ந்தார். பின்னர் இந்து சமய ஆசிரிய ஆலோசகராக உயர்வு பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் பல இடர்களுக்கு மத்தியிலும் 16 வருடங்கள் நற்பணியாற்றினார்.

ஆசிரிய பணி தவிர சமூகப் பணிகளிலும் முன் னின்று உழைத்த திரு. ஶ்ரீந்திரன் "இந்துக்களின் குரல்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் ஶ்ரீசுந்தரேச ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலையின் பொறுப்பா சிரியராகவும் செயற்பட்டு இன்று இலங்கை சிவசேனையின் செயலாளராகவும் உயர்வு பெற்றுள்ளார்.

ஆசிரிய ஆலோசகர் திரு. ஶ்ரீந்திரன் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்ந்து தன்னால் இயன்ற சேவை இந்து மதத்திற்கும் நாட்டிற்கும் வழங்க இறைவன் அருள்புரிய வேண்டும் என பௌத்த தர்மத்தில் ஆசிர்வாதம் செய்கிறேன்.

**விகாராதிபதி வண.மீகஹஜந்துரே ஶ்ரீவிமல தேரர் (B.A),**
தலைவர், நாகவிஹாரை மறுசீரமைப்பு நிதி மற்றும் மதங்களுக்கு இடையிலான குழு,
யாழ்ப்பாணம்.



### துணிச்சல் மிக்கவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத் துறையில் சிறப்புக் கலைமாணிக் கற்கை நெறியினைப் பயின்று பட்டம்பெற்ற திரு.N.P. ஶ்ரீந்திரன் (ஆசிரிய ஆலோசகர்) அவர்கள் 1985 ஆம் ஆண்டு (1985.04.16) தொடக்கம் 2021 ஆம் ஆண்டு (2021.12.05) வரையான காலப்பகுதியில் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் 2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்து வந்தவர். இவ்வகையில் இருபது வருடங்கள் ஆசிரியராகவும் பதினாறு வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் சேவையாற்றியதுடன் சைவநெறி, இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களின் ஆசிரியர்களுக்கான ஆசிரிய ஆலோசகராகவும் விளங்கியவர். க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் மேலதிக பிரதம பரீட்சகராகவும் பதினெட்டு வருடங்கள் கடமை புரிந்தவர்.

திரு.N.P. ஶ்ரீந்திரன் அவர்களுக்கு மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அவரும் அவரது குடும்பத்தவரும் சகல நலன்களும் பெற்று நிறைவான வாழ்வுபெற எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.

கலாநிதி. திருமதி. **வி.பவநேசன்,**
தலைவர், சைவசித்தாந்தத்துறை,
இணைப்பாளர், சைவசித்தாந்த முதுகலைமாணி, உயர்பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### மணிவிழா நாயகனை மனமுவந்து வாழ்த்துகின்றேன்

மணிவிழாக்காணும் திரு. N.P. ஶ்ரீந்திரன் அவர்களை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். பன்முக ஆளுமைகொண்டவரான இவர் தனது பணிக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் தடம்பதித்தவர். கல்வித்துறையில் மட்டுமல்லாது சமய மற்றும் சமூகப் பணிகளிலும் முன்னின்று உழைத்த பெருந்தகையாளன்.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அதன் பொதுச்செயலாளராக இருந்து அளப்பரிய தொழிற்சங்கப் பணியாற்றியுள்ளார்.

எமது தொழிற்சங்கப் பயணத்தில் தெளிவான பேச்சும், வாதத் திறமைகளும், ஊழல்களுக்கெதிராகத் துணிச்சலாகக் குரல் எழுப்பும் ஆளுமையும் தூரநோக்குப் பார்வையும் கொண்டவராக எம்மையெல்லாம் வழிநடத்தியிருக்கின்றார். எடுத்த காரியத்தை விடாமுயற்சியோடு செயற்படுத்தும் திறன் மிக்கவர்.

நீண்டகாலமாக எமது தொழிற்சங்கக் கோரிக்கையாக இருந்த ஆசிரிய ஆலோசகர் சேவை 2020 இல் தாபிக்கப்பட்டு தனியான அங்கீகாரத்துடன் பணியாற்றுகின்ற இக்காலத்தில் இவர் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்வதென்பது மனக்கவலையாக உள்ள போதிலும் தொழிற்சங்க வரலாற்றில் வெற்றிக்களிப்புடன் எமது பொதுச்செயலாளர் பணியிலிருந்து விடைபெற்றுச் செல்கின்றார் என்பது மகிழ்விற்குரியது.

இவர் ஓய்வுக்காலத்தில் உடல், உள ஆரோக்கியத்தோடும் மனநிறைவோடும் வாழ வாழ்த்துகின்றேன்.

[illegible]
தலைவர், வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம்.

## ‘வெட்கக்கேட்டின் சின்னம்’ அகற்றப்பட்டது



(கின்சாஸா)

ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து தியானென்மென் சதுக்க படுகொலையை நினைவுகூரும் புகழ்பெற்ற தூபி அகற்றப்பட்டுள்ளது.

இந்த நினைவுச் சின்னத்தை அகற்றும்படி கடந்த ஒக்டோபர் மாதம், ஹொங்கொங் பல்கலைக்கழகம் ஆணையிட்டதற்கு அமைய நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தச் சிலை அகற்றப்பட்டுள்ளது.

‘இந்த முடிவு, வெளியிலிருந்து வந்த சட்ட அறிவுரை மற்றும் ஆபத்தை ஆராய்ந்து பல்கலைக்கழக நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது.

8 மீற்றர் உயரம் கொண்ட அந்த செம்பு தூபி இரவோடு இரவாக கட்டுமானத் தொழிலாளர்களால் அகற்றப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனநாயக ஆதரவாளர்கள், சீனப் படையினரால் கொல்லப்பட்ட நிகழ்வை நினைவுகூரும் இந்தத்தூபி ‘வெட்கக்கேட்டின் சின்னம்’ என்று அழைக்கப்பட்டது.

டசின் கணக்கான உயிரற்ற உடல்கள் மற்றும் வேதனையான முகங்கள் கொண்ட இந்தச் சிற்பம், பீஜிங்கில் நடைபெற்ற தியானென்மென் சதுக்க படுகொலையை நினைவுகூரும் ஒருசில பொது நினைவுச் சின்னங்களில் ஒன்றாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நளினிக்கு பரோல் வழங்க தமிழக அரசு முடிவு

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியான நளினிக்கு ஒரு மாதம் "பரோல்" வழங்க தமிழக அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நளினி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நளினியின் தாயார் சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தனக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளமையால், தனது மகளுக்கு பரோல் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தநிலையில் குறித்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, முன்னிலையான தமிழக அரசின் தலைமை குற்றவியல் சட்டத்தரணி, நளினிக்கு 30 நாட்கள் பரோல் வழங்க முடிவு செய்திருப்பதாக தெரிவித்தார். (நி-5)

## பஞ்சாப் நீதிமன்ற வளாகத்தில் வெடி விபத்து

### 2 பேர் பலி: நால்வர் காயம்





(பஞ்சாப்)

பஞ்சாப் மாநிலத்தின் லூதியானாவில் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்தனர். இந்த அனர்த்தத்தில் மேலும் நால்வர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லூதியானா நீதிமன்றத்தின் இரண்டாவது மாடியில் உள்ள கழிவறையில் இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வெடிப்பினை தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்தை சுற்றி வளைத்துள்ளனர். அன்றைய தினம் சட்டத்தரணிகளின் பணிப்பகிஷ்கரிப்பு நடந்ததால், வெடிப்பின் போது நீதிமன்ற வளாகத்தில் சிலர் மட்டுமே இருந்தனர். குண்டுவெடிப்புக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022



**மற்றவர்களின் மனதைப் புண் படுத்தாமல் பேசும் துலாம் இராசி வாசர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சுகஸ்தானத்தில் சனியோடு கூடி சஞ்சரிக்கிறார். சனி அர்த்தாஷ்டமச் சனியாக இருக்கிறது. அதேநேரத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். குரு பார்வையால் குழப்பங்கள் அகலும் மாதமிது.

### பஞ்சம ஸ்தான குருவின் ஆதிக்கம்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் இராசிநாதன் சுக்கிர னுக்கு பகைக் கிரகமாகவும் விளங்குகி றார். இருப்பினும் 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதால் அவரது பார்வை க்கு பலன் உண்டு. அந்த அடிப்படை யில் பார்க்கும் பொழுது சென்ற மாதத் தைக் காட்டிலும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மேன்மை ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரி யங்களில் இதுவரை இருந்த தடைகள் அகலும். தொழில் வளர்ச்சிக்காக புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள் வீர்கள்.

### மகர புதனின் சஞ்சாரம்

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக் குப் புதன் செல்கின்றார். உங்கள் இரா சிக்கு விரயாதிபதியான புதன் சுகஸ்தா னத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட் களை வாங்குவதில் கவனம் செலுத்து வீர்கள். கட்டிய வீட்டைப் பழுதுபார்ப்பது அல்லது புதிய மனை வாங்கி வீடு கட்டுவது போன்றவைகளை செய்ய முன்வருவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சி களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

## தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும்!

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி மாதம் 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கும், 8 ஆம் இடத்திற் கும் அதிபதியான சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். வழக்குகள் உங்கள் பக்கம் சாதகமாக முடியும்.

பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தொழிலில் புதிய




திருப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் கல்வி, வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். மாற்று மருத்து வத்தின் மூலம் உடல்நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக் கிர இயக்கத்தில் வரு கின்றார். விரயாதிபதி புதன் 3 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சகோதர வழியில் விரயங்கள் ஏற்படலாம். உடன்பிறப்புகளின் கல்யாணம் சம்பந் தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

அவர்களுக்கு உத்தியோகம் கிடை த்து அதன் மூலம் உதிரி வருமானங் களும் வரலாம். பாகப்பிரிவினை சுமுகமாக நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். பொதுவாழ்வில் இருப்ப வர்களுக்கு மேலிடத்தில் நல்ல பெயர் கிடைக்கும். அதன் விளைவாகப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். ஒருசிலருக்கு இழந்த பதவிகள் மீண்டும் வரலாம். இம்மாதம் அம் பிகை வழிபாடு இன்பங்கள் வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழல் உருவாகும். வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக் கும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இயலாது. தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க முடியாமல் தத்தளிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க புரிந்து செயற்படு வது நல்லது. பணிபுரியும் பெண்களு க்கு இடமாற்றங்கள், இலாகா மாற்ற ங்கள் உறுதியாகலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**கொடுத்த வாக்குறுதியை காப் பாற்ற நினைக்கும் விருச்சிக இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசி நாதன் செவ்வாய் இராசியிலேயே வீற்றிருக்கின்றார். எனவே ஆரோக் கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். லாபாதி பதி புதன் தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து தன ஸ்தான த்தில் சஞ்சரிப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

### சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் குருபகவான்.
அவர் 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரித்தாலும் அவரது பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் செய்தொழில் சிறப்பாக இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சீராக மாற்று மருத் துவம் கைகொடுக்கும். வீடு வாங்கும் யோகம் அல்லது வீடு கட்டும் யோகம் ஒருசிலருக்கு ஏற்படலாம். 'பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

### மகர புதனின் சஞ்சாரம்

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக் குப் புதன் செல்கிறார். இதன் விளை வாக உடன்பிறப்புகள் வழியில் ஒரு நல்ல சம்பவம் நடைபெறும். படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் சகோதரர்களுக்கு இப்பொழுது வீடு தேடி வேலை வாய்ப்பு வரலாம். பஞ்சாயத்துக் கள் சாதகமாக முடியும்.

உயரதிகாரிகளின் அன்பையும், ஆதரவையும் பெற்று புதிய வாய்ப் புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். பாதியில் நின்ற கட்டடப் பணியை மீதியும் தொடருவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமைப் பொறுப்புகள் தானாக வர லாம். சவாலான காரியங்களை எளிதில் முடித்து சாதனைகள் நிகழ்த்தும் விதத் தில் கிரக நிலைகள் இருக்கின்றன.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி மாதம் 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். இதன் விளைவாக குடும் பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கூட்டாளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக




இருப்பர். வாழ்க்கைத் துணை படித்து முடித்தும் வேலையில்லாமல் இருக்கி றார்களே என்ற கவலை மாறும். நேர் முகத் தேர்வில் வெற்றி கிடைக்கும்.

## அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்!

பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக செய்த ஏற்பாடுகள் பலன்தரும். முக்கிய புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர்.

திட்டமிட்டபடியே காரியங்கள் கைகூ டும். பிள்ளைகள் தங்கள் பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்வர். நல்ல சம்பவங்களும், சுப விரயங்களும் ஏற்படும் நேரமிது.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். உங்கள் இராசிக்கு அஷ்ட லாபாதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரத்தில் தனவரவு தாராளமாக வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கூட்டு முயற் சியில் இருந்து தனித்து இயங்க முற்படு வீர்கள். வாடகைக் கட்டடத்தில் நடை பெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். குலதெய் வப் பிரார்த்தனைகளை நிறைவேற் றுவீர்கள். இம்மாதம் விநாயகப் பெரு மான் வழிபாடு வெற்றியை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

பொருளாதாரத்தில் நிறைவு ஏற்ப டும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். கணவன்-மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். செய்தொழில் வெற்றி நடை போடும். சுபகாரியங்கள் மனையில் நடைபெறும். பூமி யோகம் உண்டு. ஊதிய உயர்வு பற்றிய தகவல் கிடைக்கும். அரசுவழி அனுகூலத் தோடு புது முயற்சியில் ஈடுபட்டு வரு மானப் பெருக்கத்திற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழித்தாலே அரசியல் கைதிகளுக்கு விடுதலை

## அருட்தந்தை சத்திவேல்

(நெளுக்குளம்)

**இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் ஒழித்தாலே அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்படும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயநிர்ணய உரிமைக்காகவும் தேச விடுதலைக்காகவும் செயற்படுபவர்களை, போராடுபவர்களை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்து ஒடுக்கும் செயற்பாட்டை அமெரிக்கா உட்பட அதன் நேச நாடுகள் தவிர்க்க வேண்டும். ஒடுக்குபவர்களுக்கு ஆதரவு வழங்குவதையும் நிறுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல இலங்கை உட்பட பல நாடுகள் அரசியல் ஒடுக்கு முறையாகவும், இனவாத, மதவாத இன அழிப்பிற்காகவும் அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. இது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயலாகும். இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக சர்வதேசத்திற்கு உறுதியளித்து அதனை இது கால வரை செய்யவில்லை.

. திருத்தங்களை செய்வதாகக் கூறி அதனையும் மேற்கொள்ளவில்லை. இது சர்வதேசத்தை ஏமாற்றும் செயல் மட்டுமல்ல பயங்கரவாத செயலுமாகும். இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாமல் ஒழித்தாலே அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்தார். (4-5-299)

# மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து தனி நபர் கவனயீர்ப்பு

(நெளுக்குளம்)

மருத்துவர்களின் தொழிற்சங்க போராட்டத்தினால் மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்து ஒருவர் கவனயீர்ப்பில் ஈடுபட்டார்.

குறித்த நபர் தனது மகளுக்கு சிகிச்சை ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக வவுனியா மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.



இதன்போது பணிப்பகிஷ்கரிப்பு முடிவடைந்த பின்னரே அந்த சிகிச்சையினை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் விரக்தியடைந்த அவர் மருத்துவமனை வளாகத்தில் தனி நபராக கவனயீர்ப்பில் ஈடுபட்டார். (4-5-299-250)

# அழகுபடுத்தப்படும் பூநகரி நகரம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி நகரத்தினை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பின்தங்கிய நகரங்கள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூநகரி வாடியடி நகரத்தின் பொதுச்சந்தை வெளிப் பகுதி மற்றும் சுற்றுவட்டப் பகுதி என்பனவற்றை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக பூநகரி பிரதேச செயலக வாயிலில் இருந்து முனியப்பர் கோயில் வரை 15 அடி அகலமான நடைபாதை அமைக்கும் பணி நடைபெறுகிறது. (4-5-350)

# கால்நடைகளை கட்டுப்படுத்தவும் பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பகுதியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காலபோக நெற்செய்கை நடைபெற்று வரும் நிலையில் மாவட்டத்தின் பெருமளவிலான கால்நடைகள் பச்சிலைப்பள்ளியில் மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படுகின்றன. இக் கால்நடைகள் ஏ-9 வீதிக்கு வருவதனால் விபத்துகள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை விரைவாகச் செயற்பட்டு கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடைகளை முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம் என பொலிஸார் தொடர்ச்சியாக அறிவித்தல்கள் விடுத்து வருகின்றனர். வீதிகளில் நடைபெறுகின்ற கூடுதலான விபத்துகள் கால்நடைகளினாலேயே ஏற்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-5-350)

# விபத்தில் பெண் படுகாயம்

(தருமபுரம்)

கிளிநொச்சி, விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த கார் எதிரே வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற பெண் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். விபத்து தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)

# ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# இன்று ஒரு தகவல்

## தாய்க்கும் தாரத்திற்குமிடையே ஒரு ததிங்கினத்தோம்

பட்டமும் பதவியும் புகழும் செல்வமும் எதுவரினும் எப்போதும் போல இருக்க வேண்டும். வேறுவிதமாகச் சொல்வதென்றால் நாம் நாமாக இருக்க வேண்டும்.

திருமணமாகும் நிலையில் இருக்கும் ஆண்களும் திருமணமாகிவிட்ட ஆண்களும் மனைவியின் பெயரையும் மேற்கூறிய பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தாயும் தாரமும் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கின் தரத்தை உணர்ந்து கொள்ளவும் அறியவும் விரும்பி முறையே மகனை, கணவனைப் பதம் பார்ப்பார்கள்.

இத்தகைய பலப்பரீட்சைக்குப் பல ஆண்கள் பலியாகி விடுகிறார்கள். ஒன்று பெற்றோர் பேச்சைக் கேட்டுக்கொண்டு மனைவியைக் கொடுமைப்படுத்துகிறார்கள். அல்லது மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு பெற்றோரைப் புறக்கணிக்கிறார்கள், அவமதிக்கிறார்கள்.

பெண்களின் சொல்லாற்றல் மகத்தானது. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பது போல் கண்ணீர் என்னும் ஆபத்தான அமிலத்தைக் கொண்டு பல நல்ல இதயங்கள் கரைக்கப்படுகின்றன.

இப்போராட்டத்தில் பெரும்பாலும் தாரத்தின் கை சற்று ஓங்குவது கண்கூடு. இரவுப் பொழுதில் பெண்கள் பலசாலிகள். ஆண்கள் நிராயுதபாணிகள். ஆண்கள் பெண்களின் கேள்விக் கணைகளால் தாக்குண்டு சிதைந்து போகிறார்கள். விடியற் காலையில் இருந்து விளைவுகள் ஆரம்பம் ஆகின்றன. தாய்க்கு உலை வைக்கிறான் மகன்.

யார் என்ன வத்தி வைத்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிட வேண்டும். இடித்த புளி போலும் குத்துப் பிள்ளையார் போலும் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தான் தலையிட வேண்டும்.

தாயும் தாரமும் நேரடியாக மோதிக் கொள்ளும் சூழ்நிலையை ஆணே உருவாக்கித் தரக் கூடாது. மாறாக இருவருக்கும் எதுவும் என் மூலமாகவே சொல்லப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்திக் கூறிவிட வேண்டும்.

இவர்களுள் ஒருவர் மற்றவரைப் பற்றிக் கூறும் குறைகளை அனுதாபத்துடனும் அக்கறையுடனும் கேட்பதாகக் காண்பித்துக் கொள்ள வேண்டும். தவறு மற்றவர் பக்கம் தான் என்பதாக முதலில் கூற வேண்டும். பின்னர் மெல்ல அவர்களது குறையை இதமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

தாய்க்கும் தாரத்திற்கும் மோதல் ஏற்படக் காரணமாகும் ஒரு விடயம் நடந்திருந்தால் அதற்கு தான் காரணம் என்பதாக ஆண் ஏற்றுக் கொள்ள வேண்டும். தாய்க்கும் தாரத்திற்கும் இடையேதான் பகையே தவிர தன் மீது இருவருக்கும் பகை இல்லை என்பதை ஆண் உணர வேண்டும்.

அவசரப்பட்டு ஒருவர் சொன்னதை இன்னொருவரிடம் சொல்லக்கூடாது. இது இருவரிடையேயும் மேலும் கசப்புணர்வைத் தோற்றுவிக்குமே தவிர சமாதான உணர்வைத் தோற்றுவிக்காது.

ஒருவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு இன்னொருவர் முன் சிவ தாண்டவம் ஆடக் கூடாது. மூன்று முடிச்சுப் போட்ட பின் இவன் முற்றிலும் மாறிவிட்டான் என்று தாய் எண்ணாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம்மீது மிகப் பிரியமாகத்தான் இருக்கிறார். ஆனால் நாம் அவருடைய தாய் விடயத்தில் தலையிட்டால் ஏனோ கண்டிப்பாக இருக்கிறார் என்ற எண்ணம் தாரத்திற்கும் ஏற்படும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய நடைமுறை விடயங்களை மனத்தில் கொண்டால் ஒரு ஆண் ததிங்கினத்தோம் போட வேண்டிய அவசியம் இருக்காது. மாறாக தாக்குப் பிடித்து வாழ முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அரண்மனைக் கோமாளி



முன்னொரு காலத்தில் சந்தனபுரி நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் அரசவையில், விதூஷகன் வரதன்என்பவன்வேலை செய்து வந்தான்.

அவன் எப்போதும் அரசரை வேடிக்கையாக கேலி செய்து வந்தான். இதனால் அரசர் அவன் மீது கோபம் கொண்டார். அதனால் அவர் அமைதி குலைந்தது.

படுக்கையில் படுத்த அவரால், தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தபடியே இருந்தார்.

கோபம் அடங்காத அவர் பற்களை நற நற வென்று கடித்தார். அருகிலிருந்த அரசி, "தூக்கம் வராமல் ஏன் இப்படித் துன்பப்படுகிறீர்?" என்று கேட்டாள்.

"அதற்கு காரணம் விதூஷக்ன் வரதன் தான்!" என்றார் அரசர்.

"அரண்மனைக்கோமாளியா? அவன் மீதா இப்படிக் கோபம் கொண்டுள்ளீர். அவனை மன்னித்து விடுங்கள். உங்களை மகிழ்ச்சிப் படுத்தத்தான் அவன் அங்கே இருக்கிறான்.

அதற்காகத் தான் ஊதியம் வாங்குகிறான். நீங்கள் சிரிப்பதற்காக அவன் ஏதோ பேசி இருப்பான்" என்றாள்.

"நீ சொல்வது சரி தான். இருந்தாலும் அவன் வேலையை அவன் செய்வது இல்லை. என்னையே அடிக்கடி கேலி செய்கிறான். அதனால் தான் அவன் மீது கோபம்" என்றான்.

"உங்களை கேலி செய்யும் துணிவு அவனுக்கு வந்து விட்டதா? அப்படி என்ன கேலி செய்தான்?"

"அதை உன்னிடம் சொல்ல வேண்டுமா?" என்று கோபத்துடன் கேட்டார்.

"உங்களை அவன் அவமானப்படுத்தி விட்டானா? நீங்கள் அவனை மன்னிக்கக் கூடாது. இந்தக் குற்றத்திற்காக, அவன் சாகத்தான் வேண்டும்" என்றாள் அரசி. இதைக் கேட்ட அவர் ஆறுதல் அடைந்தார்.

"நானும் அப்படித் தான் நினைத்தேன். அவன் செத்தால்தான், மற்றவர்களுக்கு அது பாடமாக இருக்கும். யாரும் என்னைக் கேலி செய்யத் துணிய மாட்டர்" என்றார். அதன் பிறகு அவர் தூங்கத் தொடங்கினார்.

எப்படியோ அவரைத் தேற்றி விட்டோம் என்று நினைத்து அரசியும் தூங்கினாள். பொழுது விடிந்தது. எழுந்த அரசர் விதூஷகன் வரதனை முதலில் அவமானப்படுத்த வேண்டும். பிறகு கொல்ல வேண்டும். "எப்படி அவமானப் படுத்திக் கொல்வது" என்று சிந்தித்தபடி இருந்தார்.

நல்ல திட்டம் ஒன்று அவருக்குத் தோன்றியது. அரசவைக்கு வந்த அவர் அரியணையில் அமர்ந்தார். வழக்கம் போல அங்கு வந்த விதூஷகன் வரதன் அவரை வணங்கினான்.

(தொடரும்)

# மகாபாரதம்




உங்கள் செயல் காரணமாக நீங்கள் நன்மை அல்லது தீமை அடைகிறீர்கள். ஒருவன் எந்த விதமான வினையைச் செய்கிறானோ அதற்குரிய பயனைப் பெறுகிறான்.

ஒவ்வொருவனும் தன்னுடைய வினைப் பயனைத் தானே அனுபவிக்க வேண்டும். வேறு யாரும் அதை அனுபவிக்க முடியாது. மற்ற எல்லாவற்றிலும் பங்கு கொள்ளும் உற்றார் உறவினர் கர்மத்தை அனுபவிப்பதில் மட்டும் உதவி செய்ய முடியாது.

அவரவர் வினைப் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும்" என்ற அறிவுரையைக் கேட்ட அறவோர் திரும்பச் சென்று நல்ல காரியங்களைச் செய்தனர். அதன் பயனால் சுவர்க்கம் சென்று இன்பம் அடைந்தனர்.

தேவி... பேராசைக் காரர்களும், அன்பு இல்லாதவர்களும், சுயநலம் உடையவர்களும் தருமத்தில் நாட்டம் கொள்வதில்லை. அத்தகையோர் மறு பிறவியில் துன்பம் மிக அனுபவிக்கின்றனர்" என்றார்.,

பார்வதி- மக்களில் சிலர் இன்பத்தை அனுபவிப்பதற்குரிய செல்வ

மெல்லாம் உடையவராக இருந்தும் இன்பத்தை அனுபவிப்பதில்லையே... ஏன்?

ஈஸ்வரன்-மாந்தரில் சிலர் தூண்டுதலால் தருமம் செய்கின்றனரேயன்றி, தருமம் செய்வது நம் கடமை என்று எண்ணிச் செய்வதில்லை. அத்தகையோர் மறு பிறப்பில் இன்பத்துக்கு ஏது

வான பொருட்களை உடையவராக இருந்தும் இன்பத்தை அனுபவிப்பதில்லை. செல்வத்தைக் காக்கும் காவற்காரனைப் போல இருப்பாரேயன்றி அதனை அனுபவிப்பதில்லை.

பார்வதி-சிலர் செல்வம் இல்லாதிருந்தும் இன்பம் உடைய வர்களாக இருக்கிறார்களே? எப்படி.

ஈஸ்வரன்-யார் தருமத்தில் விருப்பம் உடையவர்களாக அன்புள்ளவர்களாக-தமது வறுமையிலும் பிறருக்கு உதவ முற்படுவார்களோ அவர்கள் மறுபிறவியில் செல்வம் இல்லாதிருந்த போதிலும் இன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

எனவே பொருள் இல்லையென்றால் கூடத் தான தருமம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும்.

பார்வதி- உலகில் பல வகை மனிதர்களைக் காண்கிறோம். சிலர் ஓடி ஆடி வேலை செய்யாமல், உழைக்காமல் உட்கார்ந்த இடத்தில் இருந்தவாறே எல்லா அதிகாரத்தையும் திரண்ட செல்வத்தையும் பெற்று இன்பமாக இருக்கின்றனர். அது எத்தகைய கருமத்தால்?

ஈஸ்வரன்- உனது சந்தேகம் நியாயமானதே.

உலகில் யார் தான தருமத்தின் சிறப்பை உணர்ந்து, வெகு தொலைவில் இருந்த போதும் ஊகத்தினாலேயே தானத்திற்கு உரியவர்களை அறிந்து அவர்களைச் சார்ந்து அவர்களது மனம் மகிழுமாறு தானம் முதலானவற்றை செய்கின்றனரோ அவர்கள், சிறிதும் முயற்சியின்றியே அதன் பலனை, மறுபிறவி யில் பெறுகின்றனர். தமது புண்ணியச் செயலால் விளைந்த இன்பத்தை உட்கார்ந்தவாறே அனுபவிக்கின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்த் தரப்பின் ஒற்றுமையை அனைவரும் வலியுறுத்த வேண்டும்

விரும்பியோ விரும்பாமலோ தமிழ்த் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டிய தேவைப்பாடு உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட்டிருந்தால் இன்று தமிழ் மக்களின் நிலை வேறாக இருந்திருக்கும்.

என்ன செய்வது எங்களால் முடியாவிட்டால், விதி என்று சொல்லி தப்பித்துக் கொள்கின்ற கலாசாரத்தை நாமும் பின்பற்றுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

எனினும் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபடாமல், எங்களுக்கான தீர்வை எட்ட முடியாதென்பது நிதர்சனமானது.

பொதுவில் வெளிநாட்டு அமைச்சர்கள், இராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகை தந்து தமிழ் அரசியல் தரப்புகளுடன் சந்தித்துக் கலந்துரையாடும்போது,

ஒரு தரப்பு வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி என்று சொல்லும். இன்னொரு தரப்பு ஒரு நாடு இரு தேசம் என்று கூறும். இன்னொரு தரப்போ 13ஆவது திருத்த சட்டமூலம் மெத்த என்று கூறிமுடிக்கும்.

இவ்வாறு ஆளுக்கு ஆள் முரண்பாடாகக் கதைக்க, இது உருப்படாத இனம் என்றவாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தத்தம் நாடு திரும்புவர்.

இந்த அவல நிலைமையே எங்களின் கடந்தகால அனுபவமாகவுள்ளது.

இந்நிலையில் எங்களுக்கான குறைந்த பட்ச தீர்வையேனும் எட்டுவதற்காகத் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுகூடி ஒரு பொது முடிவுக்கு வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் இந்த ஒற்றுமைக்கு உடன்படாத தமிழ் அரசியல் கட்சிகளும் இல்லாமல் இல்லை.

தமிழ் அரசியல் தரப்புகளைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி என்பதைக் கடந்து, சிலர் தனிநாடுதான் எங்களுக்கான தீர்வு என்று கூறலாம்.

இன்னொரு தரப்பு இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதுதான் எங்களுக்கான ஒரே வழி என்றும் கருத்துரைக்கலாம்.

இந்த நிலைப்பாடுகள் மாகாண ரீதியில்கூட வேறுபடலாம்.

அதாவது கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் வடக்குடன் கிழக்கை இணைக்கக் கூடாது என்ற கருத்தை முன்வைக்கலாம்.

அவரவர் மனஎழுச்சிக்கு ஏற்ப தீர்வுகளும் முன்வைப்புகளும் அமையும். ஆனாலும் இங்கு நாம் குறித்த சில விடயங்களைக் கவனித்தாக வேண்டும்.

அதாவது நடைமுறைச் சாத்தியம் என்பது இங்கு மிகவும் முக்கியமானது.

இதுதவிர, கால அசைவில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பிலும் நாம் கருசனை கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆம், நடைமுறைச்சாத்தியமில்லாத கோரிக்கைகளை முன்வைப்பது புத்திசாலித்தனமாற்றது.

ஆகையால் எங்களுக்கான தீர்வில் சாத்தியமானது எது என்பதைச் சேர்ந்து தீர்மானிப்பதற்காகவேனும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை அவசியமாகிறது.

இந்த ஒற்றுமையானது குறித்த ஒரு இலக்கை நோக்கி எங்களைக் கொண்டு செல்லும்.

ஆகையால் தமிழ் அரசியல் தரப்புகளின் ஒற்றுமையை அனைவரும் வலியுறுத்துவது மிக மிக அவசியமானதாகும்.

# யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர வடக்கு மக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்

## புதிய சிங்களே தேசிய அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் தென் பகுதி மக்களுக்கு யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்கப்படுவது போன்று, வடக்கு மக்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென புதிய சிங்களே தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டேன் பிரியசாத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீண்டும், இனவாத, மதவாத பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்த வேண்டுகோளை விடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சிங்களே தேசிய அமைப்பின் டேன் பிரியசாத் நேற்றைய தினம் ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணிக்கு தமது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வழங்குவதற்காக சென்றிருந்ததோடு, பின்னர் ஊடகங்களுக்கும் கருத்து வெளியிடுகையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், "வடக்கில் வாழும் தமிழ் அன்னையருக்கு அவர்களின் பிள்ளைகளை நினைவுகூரும் உரிமையை அவர்களுக்கு வழங்குமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இலங்கையில் யுத்த வெற்றி தினத்தின் போது தெற்கில் அன்னையர் அவர்களின் பிள்ளைகளை நினைவுகூருகின்றார்கள். தெற்கில் உள்ள அன்னையர்கள் மலர் அஞ்சலி செலுத்தி, விளக்கு ஏற்றி ஆறுதல் அடைகின்றனர். எனினும் வடக்கில் அந்த அன்னையருக்கும் இந்த வாய்ப்பில்லை.

ஆகவே அந்த அன்னையருக்கும் மக்களுக்கும் அவர்களின் உறவுகளை நினைவு கூறுவதற்கான ஒரு தினத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தீவிரவாதிகள் தொடர்பில் பேசுகின்றார்கள். எனினும் அவர்களை தீவிரவாதத்திற்கு அழைத்துச் சென்றது யார் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆகவே அந்த மக்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (ம)

### எரிவாயு வெடிப்புக்கு தீர்வு இல்லை எனின்

# பொறுப்பான அதிகாரிகளை சிறையில் அடையுங்கள்

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

"நாட்டில் எரிவாயு வெடிப்புக்குத் தீர்வு இல்லை என்றால் பொறுப்பான அதிகாரிகளைச் சிறையில் அடைக்க வேண்டும்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய அரசு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் அளவுக்குக் கொண்டு வந்துள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நம்மிடம் பணம் இல்லை. டொலர் இல்லை. கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

அரசு கூறிய வகையில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நமக்குப் பணம் இல்லை என்ற காரணத்தால் நாம் ஹெரோயின் உற்பத்தி செய்ய முடியாது.

நமக்கு என்று கலாசாரம் காணப்படுகின்றது. எனவே, நாட்டை பள்ளத்தில் தள்ளாமல் பாதுகாக்க வேண்டும் என்றார். (ம)

## ஹட்டனில் உணவகத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

### ஒருவர் படுகாயம்

(ஹட்டன்)

ஹட்டனில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இதன்போது அங்கு பணியாற்றிய ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் செய்து கொண்டிருந்தபோது இவ்வாறு எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியதாகவும் படுகாயமடைந்தவரின் நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை நாட்டில் அதிகரிப்பு

டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையிலான 20 நாட்களில் 47,120 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையிலும் 152,109 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த ஊக்குவிப்பு வேலைத்திட்டமொன்று அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு இலங்கையை பார்வையிடுவோம் என்ற ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வழிபட வேண்டாம் அல்லது உருவ வழிபாடு வேண்டாம்

என்ன இது ஒரு பொப் இசை நட்சத்திரம் அல்லது ஒரு அரசியல்வாதியிடம் தெய்வீகத்தைக் காணமுடியும் என்று .சொல்கிறீர்களா? என்று ஒருவர் கேட்டதற்கு "உங்களால் ஏற்கமுடிந்தால் ஒரு தெய்வீகம்தான் இங்கே உருக்குலைந்துள்ளது" என்று குருஜி சொன்னார். (சிரிப்பு)

நம்மைச் சேர்ந்தது என்ற உணர்வு இல்லாது வழிபடுபவர்களும் வழிபாட்டிற்கு எதிராக இருப்பவர்களும் ஒரே விதமான நிலைமையில்தான் உள்ளனர். ஏனெனில் இருவகையினருக்கும் பயம் முட்டுக்கட்டையாக உள்ளது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

### அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்

ஆரோக்கியம் பெற வேண்டி ஆதித்தனை வணங்கு. செல்வம் பெற அக்கினியை வணங்கு. ஞானம் பெற முருகனை நினைத்து வணங்கு. சுகம் பெற திருமாலைப் போற்று. ஆற்றல் பெற அம்பிகையைத் தொழு.

ஒரு உடை உடுத்தி சபை போகக்கூடாது. இரு கைகளாலும் தண்ணீர் வாரிக் குடிக்கக் கூடாது.

வறுமையுள்ளவனுக்கு எல்லாமே பாழ்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

39

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I இல் பண்டைய காலத்தில் செவ்விந்தியர்கள், பாபிலோனியர்கள், மாயன்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், ரோம் மக்கள் என ஒவ்வொரு இனக்குழு மக்களும் பொருட்களை எண்ணுவதற்கு ஒவ்வொரு முறையை வைத்திருந்தனர் என்றும் அம் முறைமைகள் பற்றியும் பார்த்தோம்.

இப்பகுதியில்தமிழ் எண் முறைமை பற்றி பார்ப்போம். தமிழ் எண் முறைமை பற்றி பார்க்குமுன் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பற்றி அறிந்திருப்பது நல்லது. ஒரு எண் அமைப்பு (அல்லது எண் முறைமை) என்பது எண்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு எழுத்து முறை என்று கூறலாம். எழுத்து முறைமை என்பது ஒரு இனத்தின் மொழியுடன் சம்பந்தப்பட்டது.

மொழியின் தோற்றம் குறித்த ஆய்வுகள் இன்னும் நடந்த வண்ணமே உள்ளன. மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழி எவ்வாறு அமைந்துள்ளது என விளக்கி, காலப்போக்கில் அம் மொழி அடைந்த வளர்ச்சியையும் மாற்றங்களையும் ஆய்வது மொழியியலின் ஒரு பிரிவு ஆகும். இது மொழி வரலாறு எனப்படுகிறது.

> **ஒரு எண் அமைப்பு என்பது எண்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு எழுத்து முறை என்று கூறலாம். எழுத்து முறைமை என்பது ஒரு இனத்தின் மொழியுடன் சம்பந்தப்பட்டது.**

மொழியைப்பற்றி விரிவாக எழுதப் புகுந்த எஸ்பெர்ஸன் (Ges person) என்பவர் "மனிதன் முதலில் தான் கண்ட பொருளுக்கு பெயர் வைக்கத் தெரியாத விலங்கு நிலையில் இருந்தான்; தன் இனத்தவருடன் பேச இயலாதவனாக இருந்தான்; பின்னர் நாளடைவில் அறிவையும் அனுபவத்தையும் பிறரிடம் சொல்வதற்காக அப்பொருளின் உருவத்தினைச் சித்திரித்துக் காட்டினான்; அதன் பிறகு பொருளின் பண்புகளை தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்று வந்தான்; மூன்றாவதாக குறுக்கெழுத்துப்போல ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இட்டு வழங்கினான்; அடுத்து எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம் தந்தான்.

இங்ஙனம் மொழியானது உருப்பெறுகிறது" எனத் தம் அரிய ஆராய்ச்சி நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

> **"மனிதன் முதலில் தான் கண்ட பொருளுக்கு பெயர் வைக்கத் தெரியாத விலங்கு நிலையில் இருந்தான்; தன் இனத்தவருடன் பேச இயலாதவனாக இருந்தான்; பின்னர் நாளடைவில் அறிவையும் அனுபவத்தையும் பிறரிடம் சொல்வதற்காக அப் பொருளின் உருவத்தினைச் சித்திரித்துக் காட்டினான்; அதன் பிறகு பொருளின் பண்புகளை தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்று வந்தான்; மூன்றாவதாக குறுக்கெழுத்துப் போல ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இட்டு வழங்கினான் ; அடுத்து எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம் தந்தான். இங்ஙனம் மொழியானது உருப்பெறுகிறது"-எஸ்பெர்ஸன்.**

தமிழ்மொழி என்பது செம்மொழியாகவும் பண்டைய காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது.

இத்தமிழ் மொழிக்கு வரிவடிவம் கொடுத்த தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன. இக்கட்டுரையில் தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய தகவல்கள் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் தேடப்பட்டு தொகுக்கப்பட்டதாகும்.

> **தமிழ்மொழி என்பது செம்மொழியாகவும்பண்டைய காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது. இத்தமிழ் மொழிக்கு வரிவடிவம் கொடுத்த தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன.**

தமிழ் எழுத்தின் கதை அல்லது வரலாறு பற்றி கந்தையா தில்லை விநாயகலிங்கம் என்பவர் ttamil.com இணையத்தில் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகிறார். "தமிழ் மொழியானது மிக மிகப் பழைமையான, தொன்மைவாய்ந்த மொழியாகும். இத்தமிழ் மொழிக்கு வரிவடிவம் அதாவது எழுத்து உருவம் என்று உருவானது? என்ற வினாவிற்குச் சரியான விடை இன்றுவரை கிடைக்கவில்லை. தற்சமயம் நமக்குக் கிட்டியுள்ள ஆதாரங்களைக் கொண்டு சில மொழி வழி உண்மையை உணர்கிறோம். இதன்படி சிந்துவெளி எழுத்தில் இருந்து அநேகமாக தமிழி அல்லது தமிழ்-பிராமி ஏற்பட்டு இருக்கலாம் என்றும், பின் பிராமி எழுத்துக்களை ஓலைச் சுவடிகளில் எழுதுவதற்கிணங்க அதை மாற்றியதால், கி.பி. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்தானது தமிழ்ப் பிராமியிலிருந்து பிரியத் தொடங்கி, அது நாளடைவில் சிறுகச் சிறுக வளர்ந்து கி.பி.6 ஆம் நூற்றாண்டில் தனித்தன்மை பெற்று, வட்டெழுத்து தோன்றியது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது.

இங்கு, வளைந்த கோடுகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால் அம்முறைக்கு வட்டெழுத்து எனப் பெயர் பெற்றது. பிராமி எழுத்துக்கள் கோடுகளாக இருப்பதால், கோடுகளை ஓலைச்சுவடியில் எழுதினால் அவை கிழிந்து விடும் என்பதால் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என நாம் கருதலாம். இது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பத்தாம் நூற்றாண்டு வரை தமிழை எழுதப் பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் எழுத்து முறையாகும்.

வட்டெழுத்தை மலையாள மொழியினை எழுதவும் பயன்படுத்தினர். கி.பி.8 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து கிரந்த எழுத்துக்களுடன் மணிப்பிரவாளத்தை எழுத பயன் படுத்தப்புட்டது. சமஸ்கிருதமும் திராவிட மொழியொன்றும் கலந்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய நடையைக் மணிப்பிரவாளம் என பொதுவாகக் குறிப்பர்.

மேலும் வட்டெழுத்துக்களின் ஆரம்ப நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கு, நடுகற்களே சரியான சாட்சிகள் ஆகும் என அறிஞர்கள் கூறுகிறார்கள். கி.பி. 11 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து தமிழ் நாட்டில் வழக்கொழிந்து, தற்கால தமிழ் எழுத்துக்களை ஒத்த எழுத்துமுறை பயன்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் கேரளத்தில் 15 ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து மலையாளத்தை எழுதப் பயன்படுத்தப்பட்டது. இவையைத் தவிர, இன்னும் இரண்டு எழுத்து முறைகள் பண்டைய தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன. அவை கண்ணெழுத்து, கோலெழுத்து ஆகும்.

வட்டெழுத்திற்கும் கோலெழுத்திற்கும் இடையே பாரிய வேறுபாடு இல்லை. ஆயினும் பிரதேசத்திற்குப் பிரதேசம் இதில் வேறுபாடுகள் காணப்பட்டன. வட்ட வடிவில் அமைந்த கோடுகளைத் தன்னுள் கொண்டு அமைந்தவை வட்டெழுத்துகள் என்றும் இதற்கு சற்று மாறுபட்டதாக, எழுத்துகள் நீள் வடிவில் அமைவது கோலெழுத்து ஆகும். கோலால் எழுதப்படும் எழுத்து கோலெழுத்து என பொதுவாக விளக்கப்படுகிறது. கோலெழுத்து என்றால் அரச ஆணைகள் எழுதப்படும் எழுத்து என்றும் ஒரு விளக்கம் உண்டு. கோல் = செங்கோல், எனவே அரசனைக் குறிக்கும் எனக் கருதலாம்?

பழங்கால தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் பண்டப் பொதிகளின் மீது சரக்கின் பெயரையும் அளவையும் படமாக வரைந்தனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது. இவ்வாறு அடையாளம் காட்டி எழுதப்படுவது கண்ணெழுத்து எனப்படுகிறது. உதாரணமாக, "வம்பமாக்கள் தம் பெயர் பொறித்த கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப்பல் பொதிக் கடை முகவாயில்..." என்றும், "கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன் மண்ணுடை முடங்கலம் மன்னவர்க்களித்தாங்கு" என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

இன்றும் நாம் பிரயாணம் செய்யும் பொழுது பெட்டிகள் மாறாமல் இருக்க எமது பெயரும் முகவரியும் அல்லது ஏதாவது அடையாளம் போடுகிறோம் அல்லவா, அதேபோல ஒன்றே கண்ணெழுத்து ஆகும். மேலும் கோலெழுத்து என்பது தென் இந்தியாவில் காணப்பட்ட பண்டைய எழுத்து முறையாகும். இது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பாவிக்கப்பட்டது.

இது மலையாளத்தில் மிகச் சமீப காலத்திலும் அதாவது கிட்டத்தட்ட கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்துள்ளது. தற்போதும் இதன் குறிப்பிடத்தக்க பாவனை அங்குள்ளது. இன்னுமொரு கருத்து, "கோடு எழுத்துக்கள்" கொண்டவை கோலெழுத்து என விளக்குகிறது திருக்குறளில்,

"எழுதுங்கால் கோல்காணாக்
கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து"--
குறள் 1285

இக்குறளில், மைதீட்டும் நேரத்தில் தீட்டும் கோலைக் காணாத கண்களைப் போல் என்ற வரி எழுதுகோலை சுட்டிக் காட்டுகிறது.

இவ்விரண்டு எழுத்து முறையிலும் எந்த அடிப்படை மாற்றமும் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே தமிழன் எழுத்து கோல் கொண்டு எழுதினான் என்பதற்கும் இது சான்றாகிறது. இன்றும் பேனாவை எழுத்து கோல் என்றே அழைக்கின்றோம்." இவ்வாறு அவர் தன் கட்டுரையில் கூறியுள்ளார். இவை பற்றியும் இக் கட்டுரையில் அலசப்படுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 பேர்...

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,832 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## எரிவாயு அடுப்பு...

புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி ஜெயந்தி நகர் பகுதியில் நேற்றுக் காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

குறித்த வெடிப்பு சம்பவத்தில் எதுவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. (ம-315)

## ஏழுமலையானை...

பட்ட விஜயத்தை மேற்கொண்டு அவர் திருப்பதி சென்றுள்ளார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, திருப்பதியில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து திருப்பதி ஏழுமலையானை தரிசித்து வழிபாடுகளில் ஈடுபடுவார். (ம)

## ஒருவேளை...

அனைத்தும் நடைமுறைக்கு பொருத்தமானதாக அமையாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட் தாக்கத்தினாலும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினாலும் பொதுமக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார்கள்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அமையவில்லை.

செல்வந்த தரப்பினரிடமிருந்து வரி அறவிடலை அதிகரித்து அதனூடாக நடுத்தர மக்களுக்கு கூப்பன் முறையின் பிரகாரம் நிவாரணம் வழங்குமாறு நிதி யமைச்சரிடம் கோரிக்கை முன்வைத் தோம். எமது ஆலோசனைகளுக்கும் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படவில்லை.

பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் உரிய திட்டங்களை இதுவரை முன்னெடுக்காமலிருப்பது கவலைக்குரியது. பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பெரும்பாலானோர் ஒருவேளை உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்றார். (ம)

## பாண் ஒன்றின்...

எதிர்வு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எதிர்வு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"நாட்டு மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவோம் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர். அரசின் முறையற்ற நிதி முகாமைத்துவத்தால் உலக நாடுகள் கடன் வழங்க மறுக்கின்றன.

டொலர் நெருக்கடியைத் தீர்க்காவிட்டால் - ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டால் அனைத்துப் பொருட்களின் விலையும் உயரும். பாண் ஒன்றின் விலை 100 ரூபாய்வரை உயரும்" என்றார். (ம)

## தமிழ்க் கட்சி...

ரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எவ் வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, "தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா?" என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு அரசியலும் காரணமாக இருக்கலாம். சம்பந்தன் ஐயா மூத்த அரசியல்வாதி. அவரை நாம் மதிக்கின்றோம். மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் எமக்குத் தொடர்பு இருந்தது.

எமக்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அந்த வேலைத்திட்டத்தில் பொது நலன் இருப்பின் பங்கேற்போம். எமக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும்கூட எல்லோரும் ஓரணியில் இணைந்துள்ளமை மகிழ்ச்சி" என்றார். (ம)

## யாழ்.மாவட்ட...

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா,

நாம் இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்களின் போராட்டத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்ய வேண்டும். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யக்கூடாது. எங்களுடைய பகுதிக்கு வந்து தொழில் செய்யும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும்போது, எங்களுக்கெதிராகவும் கடற்படையினருக்கு எதிராகவும் விஷமத்தனமான கருத்துக்கள் சில தமிழக மீனவர்களால் முன்வைக்கப்படுகின்றது என்றார். (ம-18,33,104)

## மின்சார...

எரிபொருள் விலை உயர்வினால் மின் உற்பத்திக்கு கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளதால் மின் மற்றும் நீர் கட்டணங்களை உயர்த்துவது குறித்து அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்கள் கலந்துரையாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, மின்சார கட்டணத்தை அதிகரிக்க நேரிட்டால் நீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டி வரும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம)

## அச்ச நிலையில்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர், இலங்கையில் அடுத்த ஆண்டு பஞ்ச நிலைமை ஏற்படும் என்ற உண்மையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தினார் என்ற அடிப்படையிலா? விவசாய அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து பேராசிரியர் உதித் கே.விஜேவர்தன நீக்கப்பட்டார் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் அசேதன உரப் பாவனையை தடை செய்ததன் மூலம் நாட்டின் நெல் மற்றும் ஏனைய தானிய உற்பத்திகள், 25 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உதித் கே.விஜேவர்தன தெரிவித்திருந்தார்.

இந்தக்கருத்தை வெளியிட்டு, 24 மணித்தியாலத்திற்குள் விவசாய அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து பேராசிரியர் உதித் கே.விஜேவர்தனவை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ நீக்கியிருந்தார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் அரச ஊழியர்களை ஊக்கமிழக்கச் செய்யும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாயஅமைச்சின் செயலாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரோ, எதிர்க் கட்சியை சேர்ந்தவரோ இல்லை எனவும், அரச தலைவரை

ஆட்சிக்கு கொண்டுவர உதவிய வியத்மகவின் ஸ்தாபகர்களில் ஒருவர் எனவும் ருவன் விஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.(ம)

## இலங்கையின்...

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை சுமுகமாக பயணிக்கும். எனினும் நாட்டின் உள்ளக விவகாரங்களிலான அதன் அதிகமான தலையீடுகளை எதிர்த்ததாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக தரவுகளை சேகரிக்க வேண்டும் என்பதே ஐ.நாவின் நோக்கமாக இருப்பதாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ம)

## நாட்டில் விலை...

நுவரெலியா, அநுராதபுரம் மற்றும் கினிகத்தேன ஆகிய நகரங்களில் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை பாணந்துறை, காலி, அக்குரஸ்ஸ, பதுளை, குருநாகல், புத்தளம், ரிகிலகஸ்கட, பூண்டுலோயா, கதுறுவெல மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம)

## மற்றொரு...

நபர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே மலேரியாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-18,33)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1187
வெற்றி இலக்கங்கள்
மீனம் 0 0 1 9 1 2

மெகா பவர்
திகதி 23/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0973
N 02 57 62 63 79

மஹஜன சம்பத
திகதி 2021/12/23
சீட்டிழுப்பு இலக்கம் 4625
S 5 5 5 8 6 2

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 23.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2920
J 42 49 69 72

தன நிதானய
திகதி - 2021.12.23
சீட்டிழுப்பு இலக்கம் - 655
V 07 24 28 61

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1428
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 23.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,460,420
வெற்றி இலக்கங்கள் 41 48 52 57 F

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 0703
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 23.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,238,940
வெற்றி இலக்கங்கள் 23 46 56 62 W

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1602
சீட்டிழுப்பு திகதி 23.12.2021
நிறம் பச்சை
தினம் வியாழன்
X 21 23 28 33
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 50,956,057/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,136,191/=
திகதி 23.12.2021
வெற்றி வாரம் 3314
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 06 18 23 25 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,322,251/=

சம்வர்தன வாசனாவ
திகதி 2021-12-23
வெற்றி வாரம்: 470 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,877,580/-
B 64 51 14 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,082,160/-
ரூ. 12,006,892/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கடினமான தீர்மானங்கள் எடுக்கப்படலாம்

## அமைச்சர் சந்திரசேன

(கொழும்பு)

கொரோனா தொற்றால் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இனிவரும் நாட்களில் கடினமான தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

பூகோள பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பொதுவான விளைவை எதிர்த்தரப்பினர் நன்கு அறிவார்கள். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்களைத் தவறான முறையில் எதிரணியினர் வழிநடத்துகின்றனர்.

இலங்கையில் கனிய வளங்கள் கிடையாது. சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கும்போது தேசிய மட்டத்தில் அதன் விலையைக் குறைக்க முடியாது.

இது பொதுவானதொரு விடயமாகும். எரிபொருள் விலையேற்றம் என்பது தற்காலிக பிரச்சினையாகும். இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம்.

மக்களுக்கு நிவாரண விலையில் பொருட்கள் தற்போதும் வழங்கப்படுகின்றன. புத்தாண்டுக் காலத்தின்போது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மக்கள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இனிவரும் நாட்களில் கடினமான தீர்மானங்களும் எடுக்கப்படலாம்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமாயின் பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் கொரோனாத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பது அரசின் பிரதான இலக்காக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### நிதி நெருக்கடியை சமாளிக்க

# சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா? இல்லையா?

## ஜனவரி 3 இல் இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் நிதி நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு அமைச்சரவையில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளபோதிலும், அரசாங்கத்திற்குள் ஒரு சில மாற்றுக்கருத்துகள் நிலவுகின்றன.

இதனால் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி கூடும் அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அமைச்சரவை மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

3 ஆம் திகதி கூடும் அமைச்சரவை கூட்டத்திற்கு மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி நெருக்கடி நிலைமைகள் மற்றும் டொலர் பற்றாக்குறை காரணமாக நாடு எதிர்கொண்டு வரும் சிக்கல்களை கையாள சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த தீர்வாக அமையுமென பொருளாதார நிபுணர்கள், பொருளாதார நிபுணத்துவம் பெற்ற ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசாங்கம் இந்த விடயத்தில் உறுதியான தீர்மானமொன்றை எடுக்காது தடுமாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டின் பிரச்சினையை தீர்க்க சர்வகட்சி மாநாடு

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வகட்சி மாநாடு கூட்டப்பட வேண்டுமென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள இவ்வாறு சர்வகட்சி மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எமது நாட்டில் நிலவும் பிரச்சினைகளை அரசியல் கோணத்தில் நோக்கப்படக்கூடாது. உண்மையிலேயே எழுந்துள்ள பிரச்சினைகள் அதற்கான காரணிகள் அதனை நிவர்த்தி செய்யக் கூடிய வழிமுறைகள் பற்றி ஆராயப்பட வேண்டும்.

அரசியல் ரீதியற்ற தொழில்நுட்ப ரீதியில் இந்தப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது பொருத்தமானதாக அமையும் என்றார். (ம)


A/L 2023

புவியியல் - N.பாபு

○ DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
○ C.C.A சுன்னாகம்.
○ மொடேண் சண்டிலிப்பாய்.
○ தமிழியற் கல்லூரி கோப்பாய்.
○ ஆட்ஸ் அக்கடமி புத்தூர்.

- புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
- உயர்தரத்தில் புவியியல் கற்பதற்கு சாதாரண தரத்தில் கற்றிருக்கவேண்டிய அவசியம் இல்லை.

(C-3340) 077 936 5087

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9186)

076 825 7716 (ஆகாஸ்)

வேலை வாய்ப்பு

விவசாய பண்ணை மேற்பார்வையும் வேலையும்

தகைமை :
Agriculture engineer, Agriculture science, Agriculture Degrees, Animal science Degrees

விசேட தகைமை : English, Sinhala மொழி அறிவு, கணனி அறிவு

விவசாய ஆர்வம், விவசாய அனுபவம் மிக அவசியம்.

பிறந்த இடம் : கிளிநொச்சி மாவட்டம் அல்லது முல்லைத்தீவு மாவட்டம் என்பது அவசியம்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். வயது : 23 - 33 (9173)

அனுப்பவேண்டிய முகவரி lingammaster@gmail.com

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

[ தரகர் தேவையில்லை ]

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9209)

077 814 7389, 077 614 7333

ஊர்கோழிக் குஞ்சுகள்

1 நாள், 6 நாள், 1 1/2 மாத ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு.

Rani farm - பண்ணாகம் (9198)

077 332 2433

தேவை

பாவனையில் உள்ள உழவு இயந்திரப் பெட்டி தேவை. (பாவனைக்கு உகந்த)

உரிமையாளர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (9202)

077 371 3845

காரைநகர்

கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்

பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 26.12. 2021 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி

நிகழ்ச்சிகள்

- நாட்டியாஞ்சலி
  நெறியாள்கை :- நுண்கலைமாணி ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
- பட்டிமண்டபம்
  தலைப்பு : "தற்கால சீரழிவுக்கு காரணம்"

| பண்பாடு சிதைந்தமையே! | நவீனம் வளர்ந்தமையே! |
|---|---|
| திரு. ந. ஐங்கரன் | திரு. T .ஹர்ஷன் |
| செல்வி. மோ. டிலோஜினி | செல்வி. சி. அபிஷாயினி |
| காரை க. வினோதன் | திரு. த. கருணாகரன் |

நடுவர் : சிதம்பரஜோதி, தமிழருவி த. சிவகுமாரன் (C-3343)

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவைகள் யாழ். கிளையிலிருந்து (428.K.K.S வீதி) பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வுகள் சுகாதார நடைமுறைக்களுக்கு அமைவாக நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப்பிரிவு

விசேட செயலமர்வு

A/L 2021 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரியது

26 and 27 DECEMBER 2021 - பொறியியல் தொழிநுட்பவியல், உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
28 and 29 DECEMBER 2021 - தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30 and 31 DECEMBER 2021 - ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக் கல்வி

காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை

அனுமதி இலவசம்

கருத்தரங்கிற்கு ஏன் சமுகமளிக்க வேண்டும்...
- 5 வருடமாக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்
- A/L பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களால் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகின்றது.
- பரீட்சையை எதிர்நோக்கிய வினாக்கள் அடங்கிய வினாத்தாள் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும். (C-3344)

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு... 0770175346

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-3322)

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3286)

0768226240 DHL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.